உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

அக்டோபர்–2024



வெற்றி தரும் விஜயதசமி

# பதினெண் சித்தர்கள் மகான்கள் சிறப்பிதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

aanmeegamalar.com



ஆயுதபூஜை,
விஜயதசமி
நல்வாழ்த்துக்கள்

உலக பிரசித்தி பெற்ற மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர்
பேரருளால் தரம் எங்களுக்கு இறைவன் கொடுத்த வரம்!

தரத்தில் உயர்ந்தது! ருசியில் சிறந்தது! எண்ணெய் குடிக்காத அப்பளம் உண்ண தூண்டும் உன்னத சுவை!



# ஸ்ரீராம் அப்பளம் & புட் பஜார்

# SRI RAM APPALAM

Special Quality

Special Quality

Export Quality

எங்களிடம் தரமான அப்பளம், அப்பளப்பூ, மிளகு அப்பளம், சோவி அப்பளம், கல்யாண அப்பளம், மோதிர அப்பளம், பாய் அப்பளம், மசாலா அப்பளம், சீரக அப்பளம், அரிசி அப்பளம், தக்காளி வடகம், வெங்காய வடகம், சோற்றுக் கூழ் வடகம், ஜவ்வரிசி வடகம், கலர் வடகம் வகைகள்

ஸ்ரீராம் மஞ்சள் தூள், அரிசி மாவு, புட்டு மாவு, முறுக்கு மாவு, பெருங்காயம், பருப்பு வகைகள், மக்ருன் வகைகள், மோர் வத்தல், சுண்ட வத்தல் மற்றும் ஊறுகாய் வகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

(ஸ்ரீராம் அப்பளம் எண்ணெய் குடிக்காத அப்பளம்)

தரம்! இறைவன் எங்களுக்கு அளித்த வரம்

Email Id: sriram.rajkumar1989@gmail.com / Web:www.sriramappalam.com

தயாரிப்பு கூடம்: 4/15A அனுப்பானடி சாலை, சிந்தாமணி, மதுரை- 625009

விற்பனையகம்: 51, அம்மன் சன்னதி, மதுரை - 625 001.

தொடர்புக்கு: 98432 60908, 9787932299, 95004 95248, 84388 70908

aanmeegamalar.com



# பெண் வடிவில் அருள்புரியும் விநாயகர்

பொதுவாக தெய்வங்களில் ஒரு உருவம் இருவேறு உருவங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் காட்சியளிப்பது இல்லை, ஒரே உருவத்தில் சரிபாதி ஆண், பெண் என்ற வகையில் மட்டுமே அர்த்தநாரீஷ்வரராக காட்சியளிக்கிறார்.

ஆனால் விநாயகர் மட்டும் ஆண் விநாயகராகவும், பெண் விநாயகராகவும் ஒரே சமயத்தில் இருவேறு உருவத்தில் அருள்புரிவது சிறப்பாகும். பிராஹ்மி, வைஷ்ணவி போன்ற பெண் தெய்வங்களின் வரிசையில் வைநாயகி என்ற பெயர் இடம்பெற்றுள்ளதாக பிரகத் சம்ஹிதா என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பெயர் பெண் வடிவ விநாயகரைக் குறிப்பதாகும். சக்திகணபதி, விக்னேஷ்வரி, கணேசினி, கஜானனா, ஜங்கினி, கணேஸ்வரி ஆகிய பெயர்களும் வைநாயகிக்கு உண்டு. பவுத்த வழிபாட்டில் “கணபதி ஹிருதயா’ என்று இவளைக் குறிப்பிடுவர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருச்செந்தூர், பவானி, திருக்குறுங்குடி, சுசீந்திரம் கோயில் தூண்களில் இச்சிற்பம் காணப்படுகிறது. புலிக் காலுடன் கூடிய வியாக்ரபாத விநாயகியைச் சிதம்பரத்தில் தரிசிக்கலாம்.

# பெண் சக்தியை போற்றும் நவராத்திரி

உலகெங்கும் மிகவும் பிரபலமாக கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று நவராத்திரி. கோவில்கள் மற்றும் வீடுகளில் ஒரே நேரத்தில் கொலு அமைத்து அம்மனை முழுமனதுடன் வழிபடுவார்கள்.

9நாள் கொண்டாடப்படும் இந்த பண்டிகையானது, லட்சுமி சரஸ்வதி என துர்கா தேவியின் 9 வடிவங்களையும் வழிபடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள் ளது. நவராத்திரி யின் முடிவாக பத்தாவது நாளில் தான் விஜயதசமி கொண்டாடப் படுகிறது.



நவராத்திரி வருடத்திற்கு நான்கு முறை வருகிறது. ஆனால், புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரி உலகின் பல இடங்களில் மிகவும் விமரிசையாக கொண் டாடுவார்கள். ஏனெனில், இந்த மாதத்தில் தான் சூரியன் கன்னி ராசியில் நுழையும் மற்றும் அம்பாளின் பலவிதமான வடிவங்களை போற்றி வழிபடும் காலம் ஆகும். இதனால் தான் இதை மகா நவராத்திரி என்றும் சொல்லுவார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி ஆனது மகாளய அமாவாசைக்கு அடுத்து பத்து நாட்களில் கொண்டாடப் படும். அதாவது அக்டோபர் இரண்டாம் தேதி மகாளய அமாவாசை வருகிறது. இதற்கு அடுத்த நாளான அதாவது, அக்டோபர் 3ஆம் தேதி வியாழக்கிழமை அன்று தொடங்கி அக்டோபர் 12ஆம் தேதி சனிக்கிழமை வரை நவராத்திரி கொண்டாடப்பட உள்ளது. இதற்கிடையில் அக்டோபர் 11ஆம் தேதி வெள்ளிக்கிழமை சரஸ்வதி பூஜை வருகிறது.

இந்து புராணங்கள் படி, இந்த கால கட்டத்தில்தான் துர்கா தேவி தனது ஒன்பது வடிவங்களில் வெளிப்பட்ட தாக சொல்லப்படுகிறது. இதனால்தான் இந்த பண்டிகை ஒன்பது நாள் கொண்டாடப் படுகிறது.

இந்த ஒன்பது நாளில், ஒவ்வொரு நாளிலும் துர்க்கை யின் ஒவ்வொரு வடிவங்களையும் வழிபடுவது வழக்கம். ஒவ்வொன்றும் பெண் சக்தியின் வடிவத்தை குறிக்கிறது. மகிஷன் என்ற அரக்கனை துர்கா தேவி வதம் செய்து வெற்றி பெற்றதை நினைவுக் கூறி கொண்டாடும் நாள் இந்த திருநாளாகும். இது தீமைக்கு எதிராக நன்மையின் வெற்றியை குறிக்கும் நாள் ஆகும். இந்த நாளை தான் வட மாநிலங்களில் தசராவாக கொண்டாடுவார்கள்.

## சரஸ்வதி பூஜை - ஆயுத பூஜை சுப நேரங்கள்

11.10.2024 புரட்டாசி 25 வெள்ளிக்கிழமை
காலை 6.00 முதல் 9.00 வரை
மதியம் 12.01 முதல் 1.30 வரை
மாலை 5.00 முதல் 9.00 வரை

# 75 நாட்கள் தொடர்ந்து கொண்டாடப்படும் தசரா

புரட்டாசி அமாவாசை நாளுக்குப்பின் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது நவராத்திரி. நவராத்திரியின் போது ஒன்பது நாளும் ஒன்பது வகையில் மலர் வழி பாடு செய்வார்கள். கொலுவிருக்கும் தேவியரை ஒன்பது ராகங்களில் துதித்து, ஒன்பது வகைப் பழங்கள், பிரசாதங் கள் படைத்து அன்னையின் மனம் மகிழ்வுறச் செய்வார்கள்.

துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என மூவகையாக மும் மூன்று நாட்கள் விழாக் கொண்டாடுவதும், இறுதியில் பத் தாம் நாள் அம்மனை சிம்ம வாகனத்தில் ஊர்வலமாகக் கொண்டு சென்று சூரனை வதம் செய்த நிகழ்ச்சியாக பாரிவேட்டையும் நடைபெறும்.

பிரதமை முதல் திரிதியை வரையில் கிரியா சக்தியாகிய துர்க்கா தேவியையும்; சதுர்த்தி முதல் சஷ்டி வரையில் இச்சா சக்தியாகிய மகாலட்சுமியையும்; சப்தமி முதல் நவமி வரையில் ஞான சக்தியாகிய சரஸ்வதியை வழிபாடு செய்து தசமியில் நவராத்திரியை நிறைவு செய்வர்.

ஒன்பது நாளும் விரதமிருந்து அன்னையை வழிபடும் கன்னிப் பெண்களுக்கு திருமணம் கைகூடும். குடும்பத்தில் அன்பும் ஒற்றுமையும் ஓங்கும். இளம் பெண்கள் கல்வி, இசை போன்றவற்றில் சிறப்படைவார்கள். இல்லத்தில் செல்வம் சேரும்.

குலசையில் தசரா விழா பன்னிரண்டு நாட்கள் கோலா கலமாக நடக்கும். பக்தர்கள் சுமார் ஒருமண்டலம் விரதமி ருந்து ஏதேனும் ஒரு தெய்வம் போல் வேடம் அணிந்து சுவாமி ஊர்வலம் வரும்போது கூடவே வருவார்கள். காளி வேடத்தை ஆண்கள் மட்டுமே புனைவார்கள்.

- நவராத்திரியின் முதல் நாள் தேவி மகேஸ்வரி பாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி.
- இரண்டாம் நாள் கவுமாரி, குமாரி யாகப் போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள்.
- மூன்றாவது நாளுக்கு, கன்யா கல்யாணி என்று அழைக் கப்படுகிறாள்.
- நான்காம் நாளில் அருள்பவள், மகாலட்சுமி. இவள் ரோகிணி என்று அழைக்கப்படுகிறாள்.
- ஐந்தாம் நாள் வைஷ்ணவி யாகவும் மோகினியாகவும் அலங்கரிப்பர்.
- ஆறாவது நாளுக்குரிய தேவி வடிவம், இந்திராணி. அன்று சர்ப ராஜ ஆசனத்தில் தேவி அமர்ந்திருக்கும் கோலத்தில் பூஜை செய்வது வழக்கம்.
- ஏழாம் நாள், தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக் கப்படுகிறாள்.
- எட்டாவது நாள் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது. அன்று அன்னை அன்பே உருவாக அருள்பாலிக்கிறாள்.
- ஒன்பதாம் நாள் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்த லலிதா பரமேஸ்வரியாக அருளுவாள்.
- பத்தாம் நாள் அசுரர்களை அழித்து அம்பிகை பெற்ற வெற்றியைக் குறிக்கும் விஜயதசமி. அன்று அன்னை வெற்றித் திருமகளாக ஆராதிக்கப் படுகிறாள்.

இந்த வடிவங்களில் தேவியைத் தரிசித்து வழிபடுவதால் நவநிதிகளும் பெற்று, நீடுழி வாழ்வர் என்பது ஐதிகம்.

சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ளது ஜகதல்பூர். இத் தல நாயகி தண்டேஸ்வரி. இங்கே ஒரு நாள் அல்ல இருநாள் அல்ல எழுபத்தைந்து நாட்கள் தசராவிழாவைக் கொண்டாடுவார்கள். இப்பகுதி பழங்குடியினர் அவரவர் பிரிவுக்கு உட்பட்ட ஆலய தெய்வச் சிலைகளை அலங் கரித்து தண்டேஸ்வரி ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்து வருவார்கள்.

இந்த எழுபத்தைந்து நாட்களும் யாரும் வீட்டில் இருக்க மாட்டார்கள். தண்டேஸ்வரி ஆலய சுற்றுப்புறத்திலேயே தங்கி சமைத்து சாப்பிட்டு கலைநிகழ்ச்சி நடத்தி தூங்கி வெட்ட வெளியிலேயே இருப்பர். எழுபத்தாறாம் நாள்தான் அவரவர் தெய்வங் களுடன் இல்லம் திரும்புவர்.



# அகத்தியரும் அவரின் சிறப்புகளும்

அகத்தியர். இவர் பொதிகையில் தவம் செய்ததால் “பொதிகைமுனி” என்றும், கும்பத்தில் பாய்ந்ததால் “கும்ப முனி” என்றும், அகத்தினுள்ளே ஈசனைக் கண்டதால் ‘அகத்தியர்” என்றும் அழைக்கப்படுகிறார். இவர் பற்றித் தமிழிலும், வடமொழியிலும் புராணக் கதைகள் பல உள்ளன. இவர் பேராற்றல் கொண்ட முனிவராகவும், இலக்கியம், இலக்கணம், இசை, கூத்து, மருத்துவம், சோதிடம் உளவியல் முதலான பல்கலை வல்லுநராகவும் கருதப்படுகின்றார். இவர் பெயரால் பல மருத்துவ நூல்களும், சோதிட சாத்திரங்களும் உள்ளன. இவர் முருகக் கடவுளின் ஆணைப்படி முத்தமிழுக்கு இலக்கணமாக இயற்றியது அகத்தியம் என்பர். இதனைப் பேரகத்தியம் என்றும் கூறுவர். இதில் 12000 சூத்திரங்கள் இருந்தன என்பர். சித்த மருத்துவ முறைகளை வழங்கிய முனிவர் என்றும் அகத்திய முனிவர் குறிப்பிடப்படுகிறார்



வடக்கே இமயமலையும் தெற்கே பொதிகை மலையும் இவருக்கு ஒன்றே. தமிழும், மருத்துவமும், ஜோதிடமும், இறைபக்தியும் இவரிடம் இருந்து மணம் பரப்பின.

பதினென் சித்தர்களில் மிக பிரபலமானவர் என்றால் அது அகத்தியர் தான். தெய்வங்களுடனும், மன்னர்களுடனும் தொடர்புபடுத்தி அறியப்படும் சித்தர் இவர். சித்த வைத்தியத்தின் பிதாமகர்களில் இவர் முதன்மையானவர்.

தமிழகத்தில் உலா வந்த மாபெரும் சித்தரான இவர், பழந்தமிழ் பாடல்களிலும் சரி,தேவாரம் முதலான பக்தி இலக்கியங்களிலும், வேதங்களிலும் சரி, இவர் பற்றிய பல குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன. வேதகாலத்து சப்த ரிஷிகளில் ஒருவராக போற்றப்படும் அகத்தியர் குறித்து எண்ணற்ற செவிவழி கதைகளும் கூறப்படுகின்றன. இல்லறத்தில் துறவறத்தை கடைப்பிடித்தவர் அகத்தியர். இவர் எழுதிய சமரச ஞானம் என்ற நூலில் உடம்பில் உள்ள முக்கிய நரம்பு முடிச்சுக்கள் பற்றி மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

அகத்தியரின் தோற்றம் பற்றி பல விதமாகக் கூறப்படுகிறது. இந்திரனின் சாபத்திற்கு ஆளாகிய ஊர்வசி பூலோகத்திற்கு வந்த சமயம் அவள் அழகில் மயங்கி மித்ரர் என்பவரும், வருணர் என்பவரும் காதல் வயப்பட்டனர். இதன் காரணமாக மிர்திரர் குடத்திலிட்ட வீரியத்திலிருந்து அகத்தியரும், வருணன் தண்ணீரிலிட்ட வீரியத்திலிருந்து வசிஷ்டரும் அவதரித்தனர் என்றும், குடத்திலிருந்து தோன்றியமையால் அகத்தியர் குடமுனி, கும்பயோகி என்னும் பெயர்களைப் பெற்றார் என்றும் பலவாரான கருத்துகள் நிலவுகின்றன.

தாரகன் முதலிய அரக்கர்கள் உலகை வருத்த, அவர்களை அழிக்க இந்திரன்,வாயு, அக்கினி ஆகியோர் பூமிக்கு வந்த னர்.

இவர்களைக் கண்ட அசுரர்கள் கடலுக்குள் ஒளிந்தார்கள். இந்திரனின் யோசனைப்படி அக்கினி வாயுவுடன் கூடி பூமியில் விழுந்து அகத்தியராய் அவதரித்து, சமுத்திர நீர் முழுவதையும் குடித்து விட, இந்திரன் அசுரர்களை அழித்தார்.

அதன்பின் நீரை மீண்டும் கடலுள் விடுவித்தார் அகத்தியர். அகத்தியர் நீரின் மேல் படுத்தபடியே பன்னிரெண்டாண்டுகள் கடுந்தவமியற்றி அரிய சக்திகளை பெற்றவராவார்.




சித்தர்களின் ஆசிர்வாதத்துடன்

ஸ்ரீ வேல்சித்தா ஆயுர்வேதா மருத்துவமனை

மல்டி ஸ்பெஷலிட்டி ஆஸ்பிட்டல்

பதிவு கட்டணம் நுழைவுகட்டணம் இல்லை, கன்சல்டிங்பீஸ், டாக்டர் பீஸ் இல்லை.

கை, கால், எலும்பு முறிவு குணப்படுத்துதல், மூலம், பௌத்திரம், சர்க்கரை(சுகர்) உள்ளவர்களுக்கு விரல்கள், கால், பாதித்தவர்களுக்கு எதையும் நீக்க வேண்டாம், குணப்படுத்துதல்

காய்ச்சல், இருமல், ஆஸ்துமா, டிபி, சர்வபுற்றுநோய்கள், ஆண்மைகுறை, பெண்களின் கர்ப்பப்பை கோளாறு, குழந்தைபாக்கியம் மற்றும் பல நோய்கள் மல்டி ஸ்பெஷலிட்டி ஆஸ்பிட்டல்,

பத்தியமில்லா, பக்கவிளைவுகள் இல்லாத (உணவே மருந்து மருந்தே உணவு) எனும் மருத்துவம் சிறந்த மருத்துவமனை



டாக்டர் பி.என்.ராஜன்



திருச்சி அருண் ஓட்டலில் நடைபெற்ற சித்தா ஆயுர்வேதா அக்குபஞ்சர் 24–வது மாநில மாநாட்டில் அமைச்சர் கே. என்.நேரு மற்றும் டாக்டர் கே.எஸ்.சுப்பையா பாண்டியன் தலைமையில் டாக்டர் பி.என்.ராஜன் அவர்களுக்கு சேவை செம்மல் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.



சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்த விழாவில் டாக்டர் பி.என். ராஜனுக்கு சிறந்த மருத்துவ சேவைக்கான விருதை முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி விமலா வழங்கினார். இதில் ராமஜெயம் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.



ஸ்ரீலஸ்ரீ சிவானந்தா புலிப்பாணி (பழனி ஆதீனம்) டெல்லி நாடாளுமன்றத்தில் செங்கோல் வழங்க சென்று வந்தமைக்கு பாராட்டி கவுரவிக்கப்பட்டபோது எடுத்த படம்.



கொடியேற்ற வருகை தந்த இந்திய ஜனநாயக கட்சி தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்துவை மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணித்தார்.



சென்னையில் நடந்த ஆண்டு விழாவில் தென்னிந்திய திரைப்படத்துறை தொழிலாளர் பாதுகாப்பு நலச்சங்க நிறுவனர் தனசேகரன், திரைப்பட இயக்குனர் கதிரவன், நடிகர் நிர்மல்குமார் சேவை ரத்னா விருதை வழங்கினர்.

அசோக்நகர் 4வது தெரு, சாந்திநகர் பெட்ரோல் பங்க் சமீம், கூடல்நகர், மதுரை 625018

தொலைபேசி: 9344121594 / 8428002158 / 77083888252

# பதினெட்டு சித்தர்களும் அவர்களைப் பற்றிய குறிப்புகளும்


மகான் அகத்தியர்


மகான் கருவூரார்


மகான் திருமூலர்


மகான் சுந்தரானந்தர்


மகான் பாம்பாட்டி சித்தர்


மகான் சட்டைநாதர்


மகான் இராமதேவர்

சித்தர்கள் நமக்கு பல வகையான மூலிகை மருந்து களை கண்டுப்பிடித்து சென்றுள்ளனர். ஒவ்வொரு சித்தர்களும் கண்டுப்பிடித்த அனைத்து மூலிகைகளும் நமது உடலில் ஏற்படக்கூடிய தீராத நோய்களையும்குணப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அந்த காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் அனை வருமே பல நாட்கள் உடலில் நோயின்றி வாழ இளமை மூலிகை வகைகளை சாப்பிட்டு ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தனர்.

சித்தர்களின் பிறப்பு மற்றும் அவர்கள் எத்தனை காலம் வாழ்ந்து வந்தார்கள் என்பதை பற்றி தெளிவாக படித் தறியலாம்.


**வான்மீகர்:** வான்மீகர் சித்தர் பிறந்தது புரட்டாசி மாதம் அனுசம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 700 வருடம் 32 நாட்கள் வாழ்ந்தவர். எட்டுக்குடியில் சமாதி யடைந்தார்.

**சட்டமுனி:** சட்டமுனி சித்தர் ஆவணி மாதம் மிருகசீரிடம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 800 வருடம் 14 நாட்கள் வாழ்ந்தவர். திருவரங்கத்தில் சமாதியடைந்தார்


**பதஞ்சலி முனிவர்:** பதஞ்சலி முனிவர் பங்குனி மாதம் மூலம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 5 யுகங் கள், 7 நாட்கள் வாழ்ந்தவர். பதஞ்சலி முனிவர் இராமேஸ் வரத்தில் சமாதியடைந்தார்.

**அகத்திய முனிவர்:** மார்கழி மாதம் ஆயில்யம் நட்சத்திரத் தில் அகத்திய முனிவர் பிறந்தார். வாழ்ந்த காலம்: 4 யுகம், 48 நாட்கள் வாழ்ந்தவர். திருவனந்தபுரத்தில் அகத்திய முனிவர் சமாதியடைந்தார்.

**போகர்:** போகர் வைகாசி மாதம் பரணி நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 300 வருடம், 18 நாட்கள் வாழ்ந் தவர். போகர் ஆவினன்குடி எனும் ஊரில் சமாதியடைந்தார்.


மகான் அழுகண்ணர்


மகான் கோரக்கர்


மகான் மச்சமுனி


மகான் கமலமுனி


மகான் புண்ணாக்கீசர்



மகான் இடைக்காடர்


மகான் குதம்பை சித்தர்


மகான் தேரையர்


மகான் புலிப்பாணி


மகான் காலங்கிநாதர்


மகான் போகர்

**கமலமுனி:** வைகாசி மாதம், பூசம் நட்சத்திரத்தில் கமல முனி சித்தர் பிறந்தார். வாழ்ந்த காலம்: 4000 வருடங்கள், 48 நாட்கள் வாழ்ந்திருந்தார். இவர் திருவாரூரில் சமாதி யடைந்தார்.

**திருமூலர்:** புரட்டாசி மாதம் அவிட்டம் நட்சத்திரத்தில் திருமூலர் பிறந்தார். வாழ்ந்த காலம்: திருமூலர்

aanmeegamalar.com

3000 வருடம், 13 நாட்களும் வாழ்ந்திருந்தார். சிதம்பரத்தில் திருமூலர் சமாதியடைந்தார்.

**குதம்பை சித்தர்:** ஆடி மாதம் விசாகம் நட்சத்திரத்தில் குதம்பை சித்தர் பிறந்தார். வாழ்ந்த காலம்: 1800 வருடம், 16 நாட்கள் வாழ்ந்தவர். மாயவரம் எனும் ஊரில் இவர் சமாதியடைந்தார்.

**கோரக்கர்:** கோரக்கர் சித்தர் கார்த்திகை மாதம் ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 880 வருடமும், 11 நாட்கள் வாழ்ந்தார். பேரூரில் சமாதி யடைந்தார்.

**தன்வந்தரி:** ஐப்பசி மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர் தன்வந்தரி. வாழ்ந்த காலம்: 800 வருடம், 32 நாட்கள் வாழ்ந்து வந்தார். வைத்தீஸ்வரன் கோவிலில் சமாதியடைந்தார்.

**சுந்தரானந்தர்:** சுந்தரானந்தர் ஆவணி மாதம் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 800 வருடம் 28 நாட்கள் வாழ்ந்து வந்தார். மதுரையில் இவர் சமாதி யடைந்தார்.

**கொங்கணர்:** சித்திரை மாதம் உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 800 வருடம் 16 நாட்கள் வாழ்ந்து வந்தவர். திருப்பதியில் சமாதியடைந்தார்.

**ராமதேவர்:** மாசி மாதம் பூரம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 700 வருடம் 06 நாட்கள் வாழ்ந்து வந்தவர்.அழகர் மலையில் சமாதியடைந்தார்.

**நந்தீசுவரர்:** வைகாசி மாதம் விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 700 வருடம் 03 நாட்கள் வாழ்ந்து வந்தவர். காசியில் சமாதியடைந்தார்.

**இடைக்காடர்:** புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 600 வருடம் 18 நாட்கள் வாழ்ந்து வந்தவர். திருவண்ணாமலையில் சமாதி யடைந்தார்.

**மச்சமுனி:** ஆடி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 300 வருடம் 62 நாட்கள் வாழ்ந்து வந்தவர். திருப்பரங்குன்றத்தில் சமாதியடைந்தார்.

**கருவூரார்:** சித்திரை மாதம் அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 300 வருடம் 42 நாட்கள் வாழ்ந்து வந்தவர். கரூரில் சமாதியடைந்தார்.

**பாம்பாட்டி சித்தர்:** கார்த்திகை மாதம் மிருகசீரிடம் நட்சத்திரத்தில் பிறந்தார். வாழ்ந்த காலம்: 123 வருடம் 14 நாட்கள் வாழ்ந்து வந்தவர். சங்கரன்கோவிலில் சமாதியடைந்தார்.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம் ஓடு வியாபாரம் & சாமில்

SAK சீனியப்பா குரூப்ஸ் SAK




எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

சீனியப்பா லாட்ஜ் A/C

SAK திருமண ஹால்



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,

9842868256



# நவராத்திரி விரத பலன்கள்

வழக்கமாக புரட்டாதி மாதத்தில் வரும் வளர்பிறைப் பிரதமை நாள் முதல் நவமி நாள் வரை வருகின்ற ஒன்பது நாட்கள் நவராத்திரி விரத நாட்களாக அனுஷ்டிக்கப் பெறுகின்றது.

அதில் முக்குணங்களுக்கும் மூலமான சர்வலோக நாயகியை ஒன்பது நாள்களும் பூஜிக்கும்போது, முதல் மூன்று நாள்கள் தமோ குண சஞ்சாரியான ஸ்ரீதுர்கா பரமேஸ்வரியை வீரத்தையும், தைரியத்தையும் வேண்டியும்

அடுத்த மூன்று நாள்கள்ராஜோ குண சொரூபியான ஸ்ரீ மகாலட்சுமியை சகல செல்வங் களையும் வேண்டியும்,

கடைசி மூன்று நாள்கள் சாத்வீகக் குண சொரூபியான ஸ்ரீ சரஸ்வதியை வித்தை, கல்வி, அறிவு, சகல கலை ஞானங்கள், ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் வேண்டியும் வணங்குகின்றோம்.



கன்னி ராசிக்கு அதிபதியானவன் புதன். வித்யாகாரகன் எனப்படு பவன். கல்வி, புத்தி, தொழில் ஸ்தானம் சரியாக அமைய புதனின் பார்வை முக்கியமானது என்பார். இந்தக் காலத்தில் நவராத்திரி கொண்டாடுவது சாலச்சிறந்தது என்று கருதி எம் முன்னோர் இவ் விரதத்தை அனுஷ்டித்து வந்துள்ளனர்.

பூவுலகை காத்தருளும் எல்லாம் வல்ல ஈசனுக்கு ஒரு ராத்திரி, அதுவே சிவராத்திரி. ஆனால் பரப்பிரம்மமான சக்திக்கு 9 ராத்திரிகள். அதுவே நவராத்திரி என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக எல்லாப் பூஜைகளும் பகல் நேரத்தில் மேற்கொள்வது வழக்கம்.

ஆனால் சிவராத்திரி, நவராத்திரி நாட்களில் மட்டுமே மாலையிலும், இரவிலும் பூஜைகள் செய்யப்பெறுகிறன.

பிரதமை நவராத்திரியின் முதல் நாளில் தேவியான மகேஸ்வரி பாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி. இன்றைய தினம் மல்லிகை, வில்வம் கொண்டு அலங்கரிக்கவேண்டும். வெண் பொங்கல் நைவேத்தியம் செய்யலாம்.

துவிதியை இரண்டாம் நாள் தேவி கவுமாரி தேவியாக போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள். முல்லை, துளசியால் அலங்காரம் செய்து புளியோதரை நிவேதனம் பண்ண வேண்டும்.

திரிதியை மூன்றாவது நாளுக்கு உரிய வாராகி அன்னை, கன்யா கல்யாணி என்று அழைக்கப்படுகிறாள். செண்பகம் மற்றும் சம்பங்கிகள் இவளுக்கு உகந்தவை. சர்க்கரை பொங்கல் படைத்து வழிபட வேண்டும்.

சதுர்த்தி நான்காம் நாளில் அருள்பவள் மகாலட்சுமி. இவள் ரோகிணி என்று அழைக்கப்படுகிறாள். மல்லிகை பூக்களால் அலங்காரம் செய்து, அன்னம் நைவேத்தியம் செய்து வழிபட வேண்டும்.

பஞ்சமி ஐந்தாம் நாளில் அன்னையை வைஷ்ணவியாகவும் மோகினியாகவும் அலங்கரிப்பர். முல்லைப்பூ அலங்காரமும் தயிர் சாதமும் இவளுக்கு ஏற்றவை.

சஷ்டி ஆறாவது நாளுக்குரிய தேவி வடிவம் இந்திராணி. சர்ப ராஜ ஆசனத்தில் தேவி அமர்ந்திருக்கும் கோலத்தில் பூஜை செய்வது வழக்கம். தேவிக்கு ஜாதி மலரே உகந்தது. தேங்காய் சாதம் படைத்து வணங்கலாம்.

சப்தமி ஏழாம் நாளில் தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக்கப்படுகிறாள். இந்த அன்னைக்கு தாழம்பூ சூடி, தும்பை இலைகளால் அர்ச்சனை செய்ய வேண்டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபடலாம்.

அஷ்டமி எட்டாவது நாளில் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது.

இந்த நாளில் அன்னை அன்பே உருவாக அருள்பாலிக்கிறாள். இவளுக்கு உகந்த ரோஜா மலரை சூடி, சர்க்கரை பொங்கல் படையல் இட்டு வழிபடலாம்.

நவமி ஒன்பதாம் நாளில் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்த லலிதா பரமேஸ்வரியாக அன்னையை வழிபடுவது வழக்கம். இன்றைய தினம் பால் பாயாசம் நைவேத்தியம் செய்து வழிபடலாம். தாமரை மலர்களால் அலங்கரித்து

விஜயதசமி பத்தாவது நாள் விஜய தசமி. விஜயம் என்றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம் வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின்போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் நலம்பெறும் வகையில் வெற்றி கிடைக்கும்.

விரத பலன் நவராத்திரி விழாவின் ஒவ்வொரு நாளும் சிறப்பு என்றாலும் அதில் விசேஷமான நாட்கள் கடைசி மூன்று நாட்கள். சக்தியற்றவர்களாக இருப்போர் நவராத்திரி விரதத்தில் பூஜை செய்வதற்கு மிகவும் முக்கியமான நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி தினங்களாகும். இந்த மூன்று நாட்களும் விரதத்தோடு பூஜித்தால் ஒன்பது நாட்கள் பூஜித்த பலன் கிடைக்கும். நவராத்திரி விரதம் இருப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பயன் அடைவார்கள்.

aanmeegamalar.com

ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

## வாசுதேவா என்றால்
## வளம் பொங்கும்!
## வாசுதேவன் பாத்திரத்தில்
## ராசி பொங்கும்!!





# வாசுதேவன் பாத்திரக்கடை

**முகவையின் மபெரும்**
**பாத்திரக்கடை**



**கல்யாண சீர்வரிசைக்கு தேவையான**
**பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர்,**
**கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும்**
**வாங்க கைராசியான நிறுவனம்**



12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம்
போன்: 04567220 209, செல்: 88074 08807

## ஓடும் ரயிலை நிறுத்தி ஆங்கிலேய அதிகாரியை திகைக்கவைத்தவர் காசி, ராமேசுவரத்தை கையில் காண்பித்த மகான்

# கட்டிக் குளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டி குளம் பகுதியில் உள்ள திருவேட்டை அய்யனார் கோவில் பூசாரியாக இருந்த குப்பமுத்து வேளார் இவருக்கு நீண்ட நாள்களாக குழந்தை இல்லாமல் இருந்தது ஒரு நாள் குப்பமுத்து வேளாரும் மனைவி கூத்தாயி உடன் அங்கு உள்ள ராமலிங்க சுவாமி கோவிலில் நீண்ட நாள்களாக தங்களுக்கு குழந்தை இல்லததை கூறி தங்களுக்கு தெய்வ குழந்தை வேண்டும் என்று மனமுருகி வேண்டி னார். அதன் பலனாக 1858 ஆம் ஆண்டு ஆடி மாதம் பூராடம் நட்சத்திரத்தில் பூசாரி குப்பமுத்து கூத்தாயி தம்பதியர்க்கு அழகிய குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு மாயாண்டி சுவாமி என பெயர் இட்டு வளர்த்தனர்.

சாதாரண குழந்தையாக வளர்ந்த மாயாண்டி சுவாமி தன்னுடன் இருந்த தெய்வீக சக்தி வெளி உலகத்திற்கும் தந்தைக்கும் தெரிய ஆரம்பித்தது ஒரு நாள் குப்பமுத்து வேளார் தன் மகன் மாயாண்டி சுவாமியுடன் திருவேட்டை அய்யனார் கோவிலுக்கு பூஜை செய்த போது கோவில் முன்பு விளையாட சொல்லிவிட்டு பூஜை பணிகளை செய்து கெண்டு இருந்தார்.

அப்போது வெளியே விளையாடி கொண்டிருந்த மாயாண்டி சுவாமி கழுத்தில் நல்லபாம்பு சுற்றிக்கொண்டு இருந்தது வீதியில் சென்ற மக்கள் சிறுவன் மீது ஏறிய பாம்பை கண்டு அலறினார்கள் பூஜையை முடித்த குப்பமுத்து வேளாரும் மகன் மீது பாம்பு சுற்றியதை பார்த்து திகைத்து நின்றார் அடித்தால் கடித்து விடுமோ என்று பயந்து கூச்சல் போட்டனர் கூச்சலை கேட்டு திரும்பிய மாயாண்டி சுவாமி தன் மீது சுற்றி கொண்டிருந்த நல்லபாம்பை பார்த்து கொஞ்சம் இறங்கி போறிங்கலா நாக ராஜா என கூறிய உடன் இறங்கி அருகில் உள்ள புதரில் சென்று மறைந்தது.

பாம்பை கண்டு பயந்த தந்தையிடம் தினமும் என் நன்பன் நாகராஜனிடம் விளையாடிக்கொண்டு இருந்தேன் என்று சிரித்த முகத்துடன் கூறினார்.

இதை போல் மாயாண்டி சுவாமி தாயார் வீட்டிற்கு முன்னால் நெல்லை அவித்து காய போட்டு பின் காக்கைகள், குருவிகள் வராமல் நெல் கதிர்களை பார்த்துக் கொள்ளும் படி கூறி விட்டு குளத்திற்கு சென்று விட்டார்.

அப்போது எராளமான பறவைகள் தானியங்களை சாப்பிட்டு கொண்டு இருந்தது இதை மகிழ்ச்சியுடன் பறவைகளை விரட்டாமல் பார்த்து கொண்டு இருப்பதை தாய் கூத்தாயி மகனிடம் கோவம் அடைந்தார்.

உடன் மாயாண்டி சுவாமி பறவைகளை மயக்கம் அடைய செய்யவா என கேட்ட போது, மகன் அறியாமல் கேட்கிறான் என நினைத்து தாயார் சரி என்கிறார்.

உடனே தியான நிலையில் அமர்ந்து பறவைகளை பார்த்து ஏதோ கூற பறவைகள் முழுவதும் மேலிருந்து விழ ஆரம்பித்தது. பயந்த தாயார் கூத் தாயி பறவைகளை பறக்கவிடு நான் விளையாட்டாக கூறினேன். என்று கூறிய மறு நிமிடமே தாயின் கட்டளைபடி மாயாண்டி சுவாமி மயங்கிய பறவைகள் துள்ளி எழுந்து பறந்து சென்றது.

இப்போதும் கட்டிகுளம் மாயாண்டி சித்தரின் கருப்பனேந்தல் மடத்தில் கால்நடைகள் மேய்வதற்காக வயலும் தண்ணிர் தொட்டியும் உள்ளது. ஏராளமான பறவைகளும் வந்து செல்லுகின்றன.

இப்போதும் மடத்தில் பல இடங்களில் குருவி கூடு களை காணலாம் மாயாண்டி சுவாமி தினமும் மதுரை மற்றும் பல்வேறு இடங்களுக்கு சென்று ரயில் மூலம் மானா மதுரைக்கு வந்து கொண்டு இருந்தார்.

அப்போது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்த ஆங்கி லேய டிக்கெட் பரிசோதகர் குந்து காலிட்டு தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் தலையில் பென்சிலால் தட்டி டிக்கெட் கேட்கிறார். கண் விழித்த மாயாண்டி சுவாமி சிரித்து விட்டு மீண்டும் தியான நிலைக்கு செல்கிறார். கோபம் அடைந்த அதிகாரி உதவியாளரை அழைத்து சிறிய ரயில் நிலையத்தில் நின்ற போது இறக்கி விடப்பட்டார்.

அவர் பயணம் செய்த ரயில் புறப்படவில்லை ரயில் நிலையத்தில் உள்ள பணியாளர்களும் ஏன் என்று திகைத்து கொண்டு இருந்தனர். பிற பெட்டிகளில் இருந்த பொது மக்கள் தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் காலில் விழுந்து ஆசி பெற்று சென்றனர். அப்போது சிலர் டிக்கெட் பரிசோதகரிடம் மகா சித்தர் மாயாண்டி சுவாமி பயணம் செய்தால்தான் ரயில் புறப்படும் என தெரிவித்தனர்.

பின் டிக்கெட் பரிசோதகர் மாபாண்டி சுவாமியிடம் மன்னிப்பு கேட்டு ரயிலில் பயணம் செய்யுமாறு கேட்டு அமர்வதற்க்கு இருக்கையும் ஏற்பாடு செய்கிறார். மாயாண்டி சுவாமி அமர்ந்தவுடன் ரயில் புறப்பட்டு மானாமதுரை செல்கிறது.

இதை அறிந்த மக்கள் சுவாமியை வரவேற்க திரண்டனர்.

aanmeegamalar.com









அதே ரயிலில் ஆய்வு பணிக்காக ராமேஸ்வரம் வந்த ஆங்கிலேய உயர் அதிகாரி சுவாமியின் மகிமையைக் கண்டு உங்களுக்கு என்ன வேண்டும் என கேட்க இறை வனிடம் சரணாகதி ஆகும் என்னை போன்ற சாதுகளுக்கு இலவசமாக ரயில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து வாய் மொழி உத்தரவு பிறப்பிக் கப்பட்டது, இப்போதும் சாதாரண பெட்டிகளில் சாதுக்கள் அகோரிகள் ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடம் செல்ல பயணம் செய்கின்றனர். டிக்கெட் பரிசோத கர்கள் ரயிலில் கிழே அமர்ந்து இருக்கும் காவி உடை அணிந்த முதியவர் களிடம் டிக்கெட் கேட்பதில்லை.

ஒருநாள் சுவாமிகள் மதுரைக்கு அருகே ஒரு சிறு கிராமத் தில் வசித்த பிராமணத்துக் தம்பதியினரின் இல்லத்திற்குள் திடீரென நுழைந்தார். அத்தம்பதியினரிடம், "உங்களுக்குப் பத்தாவதாக ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது. அதற்குச் சுப்பிர மணி என்று பெயர் வை.

ஆனால் அவன் சில காலம் மட்டும் உங்களுடன் இருப் பான். பின்னர் அவனை இந்த உலகமே கொண்டாடும்" என்று ஆசி வழங்கினார். அதன்படி பிறந்த சுப்பிரமணிதான் பின்னர் சுவாமிகளிடம் தீட்சை பெற்று 'சாந்தானந்த சுவாமிகள்' ஆனார். சேலம் புதுக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள 'ஸ்கந்தாஸ்ரமம்' அமைத்துப் பக்தர்களின் குறைகளைத்




ஸ்ரீவிநாயகர் கோவில் கருங்கல் திருப்பணி

சிவகெங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகாசித்தர் மாயாண்டி சுவாமிகளால் பிரதிஷ்டை செய்து வழிபட்டு அவரால் உருவாக்கப்பட்ட ஸ்ரீவிநாயகர் கோவில் கருங்கல் திருப்பணி சுவாமிகளின் ஆசியுடன் நடைபெற்று வருகிறது. தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் ஆசிபெற்ற ஆன்மிக பெருமக்கள் இத்திருப்பணியில் பங்கேற்று தங்களால் இயன்ற நிதி உதவி பொருள் உதவி செய்து கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் திருவருள் பெற கேட்டுக் கொள்கிறோம்.



இறைபணியில்

கைங்கரிய தொண்டர்
R.K.சேகர் M.A.,
9976579601 கட்டிக்குளம்.

R.M.தண்டாயுதபானி M.A., BL., Advocate
கட்டிக்குளம், பரம்பரை தர்மகர்த்தா,
3வது தலைமுறை 8122141659

கருப்பனேந்தல் மடம், சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் முதல் ஜீவ ஒடுக்க ஸ்தலம் ஆகும்

தீர்த்தார்.

ஒருமுறை சுவாமிகள் நாகப்பட்டினம் சென்றிருந்தார். அப்போது ஒரு சிறுவன் திருநீறு வாங்குவதற்காக நீட்டிய கையைத் தொட்டதும் சுவாமிகள் மகிழ்ச்சியுடன் "நீ யோகக் காரனப்பா! உன் பேச்சைக் கேட்கப் பணத்தைக் கொட்டிக் கொடுப்பார்கள். அதனைக் கொண்டு ஏராளமான ஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்யும் யோகமும் உனக்கு இருக்கிறது" என்று கூறி ஆசிர்வதித்தார். அந்தச் சிறுவன்தான் பின் னாளில் திருமுருகக் கிருபானந்தவாரியார் சுவாமிகள் எனப் புகழ் பெற்றார். சுவாமிகள் கூறியபடி சுமார் நாற்பது திருத்தலங்களுக்குத் திருப்பணிகளும் செய்தார்.

மதுரை வடக்கு மாசி வீதியில் உள்ள இருளப்ப கோனாருக்கு ஜாதகம் பார்த்ததில் இளமையில் ஆயுள் முடிந்து விடும் என்று கூறி காசி ராமேஸ்வரம் சென்று வந்தால் ஆயுள் விருத்தி யாகும் என ஜாதகம் ரீதியாக தெரிந்து கொண்டனர்.

பெற்றோரை விட்டு காசி ராமேஸ்வரம் செல்ல முடியாமல் மதுரை கோரிப்பளையம் வரும் மாயாண்டி சுவாமியை சந்திக்க மக்களோடு மக்களாக இருக்கிறார். அப்போது மாயாண்டி சுவாமி தனது சூட்டுகோலால் கையை நீட்டி, "இருளப்ப கோனார் இங்கே வா, என்ன அப்பு ஆயுள் விருத்தி பண்ண னுமா? உன் குடும்பம் விருத்தி ஆக வேண் டுமா?" என கூறி, சுவாமியுடன் கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் வந்து, மடத்தில் நாற்பத்து எட்டு நாட்கள் அன்ன ஆகாரமின்றி தவ சாலையில் மாயாண்டி சுவாமி தியானம் செய்தார். நாற்பத்து எட்டு நாட்களுக்கு பின்பு, இருளப்ப கோனாரைப் பார்த்து "உன் கட்டைக்கு அழிவு இல்லை உன் குடும்பம் விருத்தியாகும்" எனக் கூறி தன் உள்ளங்கையில் காசி விஸ்வநாதரையும் ராமேஸ்வரம் ராமநாதசுவாமியை காண்பித்து போய் வா என்கிறார். அதன் பின் தன் ஜீவ ஒடுக்கமான கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் தவச் சாலைக்கு வரு வோருக்கு காசி ராமேஸ்வரம் சென்று வந்த புண்ணியம் கிடைக்கும் என்று பக்தர்களால் நம்பப்படுகிறது.

இது பற்றி மடத்தில் அன்னதானம் சேவைகளை செய்யும் பக்தர் கட்டிகுளத்தை சேர்ந்த சேகர் கூறியதாவது:-

கட்டிகுளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் ஏராள மான ஆன்மீக அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார். இங்கு இப் போதும் பசி என்று வருவோருக்கு அன்னதானமும் ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் அவதார விழாவும் நடைபெறுகிறது.

இப்போதும் ஏராளமான வீடுகளில் சித்தர் அனுமதியுடன் வரையப்பட்ட திருஉருவ படத்தின் முன்பு வேண்டுபவருக்கு பல்வேறு ஆன்மீக அதிசயங்களை நிகழ்த்தி வருகிறார். மாயாண்டி சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கம் தான்பிறந்த கட்டிகுளம் கருப்பனேந்தல் மடமும் திருப்பரங்குன்றம், திருகூடல் மலை நவ திருப்பதியில் ஒன்றான ஆழ்வார் திரு நகரி, மன்னார்குடி மற்றும் பர்மா ஆகிய இடங்களிள் ஜீவ ஒடுக்கமானார்.

அவர் கையினால் செய்த பள்ளிகொண்ட பெருமாள் கருப்பனேந்தல் மடத்தில் இன்றும் உள்ளது பக்தர்களின் மன குறையை முன்பே அறிந்து தீர்க்கும் மாகா சக்தியாக சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் உள்ளார் தற்போது கருப்பனேந்தல் மடத்தில் உள்ள முதல் ஜீவ ஒடுக்க ஸ்தலமான இங்கு அவர் வாழ்ந்த காலத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்த விநாயகர் கோவில் கருங்கல் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது என அவர் தெரிவித்தார்.

# தெய்வீக ஆற்றல் கிடைக்கும் கருப்பனேந்தல் மடம்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடம் இங்கு மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர் ஜீவஒடுக்க கோவிலாகும். இந்த இடத்தை சுற்றி ஏராளமான வயல் வெளிகளும் நீர்நிலைகள் உள்ளது.




கருஎன்றால் உயிர் ஏந்தல் என்றால் நீர்நிலை கள் உள்ள பகுதியாகும். ஆல், அரசு, வேம்பு, வில்வம், போன்ற உயிர் வளர்க்கும் மரங்களாகும். இந்த அணுக்கள் மூலமாக வித் திட்டு வாழ்ந்த மகான்கள் சூட்டுகோல் ராமலிங்க சுவாமி, சித் தர் செல்லப்பாசுவாமி, மகாசித்தர் மாயாண்டி சுவாமி, பிராமணத்திஅம்மாவும், சிலம்பு சுவாமி, பொன்னின் அம்மையார் போன்றவர்கள் வாழ்ந்த இடமாக கருப்பனேந்தல் மடம் இருந்து உள்ளது. நீரநிலைகள் நிறைந்தஇப்பகுதி யில் மகான்கள் வாழ்ந்து பிராண உயிர் காற்றை மண்ணில் பரப்பிய இடமா கவும் ஞானபீடமாகவும் பக்தர்களின் மனகுறைகளை அறிந்து மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சித்தர் தீர்பதாக வும் சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கமாகவும் கருப்பனேந்தல் மடம் உள்ளது.



தற்போது கருப்பனேந்தல் மடத்தில் பக்த்தர்களின் கைங்கர்யம் மூலம் புதிதாக தத்ரூபமாக வெள்ளி சூட்டுகோல் ஐம்பொன்னால் மகாசித்தர் மாயாண்டி சுவாமி சிலை பிரதிஷ்டை மற்றும் புதிய மயில் வாகனம் கருப்பனேந்தல் மடத்தில் உள்ளது. தினமும் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

பார்த்திபனூருக்கும் கமுதிக்கும் இடையில் கொடும்பளூர் என்ற சிற்றூர் உள் ளது. அங்கு சுவாமி கள் முள் படுக்கையில் படுத்திருந்தார். அப்போது அவ்வூர் மக்களிடம் இந்த இடத்தில் முருகன் சிலை ஒன்று மண்ணில் புதைந்து கிடக்கிறது. தோண்டி எடுத்து வழிபட வேண்டும் என்று கூறினார். மக்கள் அவ்விடத்தைத் தோண்ட அழகான முருகன் சிலை கிடைத்தது. அங் கோயில் கட்டி மண்ணில் புதைந்து கிடந்து முருகன் சிலையை பிரதிஷ்டை செய்து திருவிழாக்கள் நடத்தி வணங்கி வருகின்றனர்.

# போகர் உருவாக்கிய பழனி நவபாஷான சிலை

பொதிகை மலைச்சாரலில் போகர் தங்கியிருந்த போது ஒரு நாள் இரவு உணவு சமைத்து உண்ட பின் நீர் வேட்கையால் அருகிலிருந்த சிற்றூருக்குச் சென்றார். ஒரு வீட்டுத் திண்ணையில் கும்பலாக அந்தணர்கள் அமர்ந்து வேதம் ஓதிக் கொண்டிருந்தனர். போகர் அவர்களிடம் தாகத்திற்கு தண்ணீர் கேட்டார். “யார் நீ! அப்பாலே போ! அருகில் வந்தாலே நாற்றமடிக்கிறது” என்று எரிந்து விழுந்தனர். போகர் அவர்களின் அறியாமையைக் கண்டு அவர்களுக்கு பாடம் புகட்ட நினைத்து அந்த வழியாக வந்த பூனை ஒன்றின் காதில் போகர் வேதத்தை ஓதி விட்டார். பூனை நன்றாக உட்கார்ந்து கொண்டு உரத்த குரலில் வேதத்தை ஓதத் தொடங்கியது. அந்தணர்கள் தாங்கள் அறியாமல் செய்த அவமதிப்பை பொறுத்தருளும்படி வேண்டினர். “ஐயனே எங்கள் வறுமை அகல தாங்கள் வழி செய்ய வேண்டும்” என்றும் வேண்டிக் கொண்டனர். போகர் அவர்களுடைய வீடுகளில் இருந்த உலோகங்களால் ஆன பொருட்களை எல்லாம் தன்னிடம் இருந்த ஆதி ரசத்தால் பொன்னாக மாற்றி அவர்களை மகிழ்வித்தார்.

போகர் தவம் செய்து முடித்த இரசமணிக் குளிகைகளின் ஆற்றல் கண்டு மிகவும் வியப்படைந்தார். அதே போல குளிகைகளைச் செய்து மற்ற சித்தர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டார். அதற்காக ரோமாபுரி சென்று மிகத் தூய்மையான ஆதி ரசம் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தார்.



உடனே குளிகைகளில் ஒன்றை வாயில் போட்டுக் கொண்டு ரோமாபுரியில் தோன்றி அங்கு இருந்த இரசக் கிணற்றைத் தேடிப் பிடித்தார். இரசத்தை சுரைக் குடுவையில் நிரப்பிக் கொண்டு விண்ணில் தாவினார். அதன்பிறகு போகர், தட்சிணா மூர்த்தி உமைக்கு அருளிச் செய்த ஞான விளக்கம் ஏழு சட்சத்தையும் ஏழு காண்டமாக்கி தமது மாணவர்களுக்கு உபதேசித்தார். மற்ற சித்தர்கள், “இறைவன் உபதேசித்ததை வெளியில் சொல்வது குற்றம்” என்று கூறி இத்தகைய செயலை அவர் உடனே நிறுத்தியாக வேண்டும்” என்று தட்சிணாமூர்த்தியிடம் முறையிட்டனர்.

போகர் பழனி மலையில் கடும் தவத்தில் ஈடுபடத் துவங்கினார். அவருடைய தவத்தின் பயனாக முருகப் பெருமான் அவர்முன் காட்சியளித்தார். அப்பொழுது போகரிடம், முருகப்பெருமான் பழனி மலையில் தன்னை மூலவராக வடிவமைத்து விக்கிரகமாகச் செய்து அதை எப்படி பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்பதையும் கூறி காரியசித்தி உபாயத்தையும் சொல்லி மறைந்தார் போகர் கனவில் முருகப்பெருமான் சொன்னபடியே நவபாஷாணம் என்னும் ஒன்பது விதமான கூட்டுப்பொருட்களைக் கொண்டு பழனி ஆண்டவர் தண்டாயுதபாணி சிலையைச் செய்து முடித்து அவர் சொன்ன வண்ணமே பிரதிஷ்டை செய்தார்.

பழனிமலை இறைவன் திருமேனியைத் தழுவி ஊறி வந்த பஞ்சாமிர்தத்தையே உணவாகக் கொண்டார். ஒன்பது விதமான விஷங்களை (நவ பாஷாணங்கள்) முயன்று கூட்டி உருவாக்கிய திருமேனியில் ஊறிய விபூதியும், பஞ்சாமிர்தமும் போகருக்கு உள்ளொளியைப் பெருக்கியது.

இதே மாதிரியான நவபாஷாண மூர்த்தியான திருச்செங்கோடு அர்த்த நாரீஸ்வரனை உருவாக்கியவரும் போகரே என்றும் கூறுவதுண்டு.

பழனியில் சிலகாலம் வாழ்ந்த போகர் அங்கேயே சமாதியடைந்தார். அவரது சமாதி பழனி ஆண்டவர் ஆலயத்தின் உட்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் உள்ளது. போகர் பூசித்து வந்த புவனேச்வரி அம்மையின் திருவுருவம் பழனியாண்டவர் சந்நிதியில் இன்றும் உள்ளது. போகரின் சமாதி அமைந்துள்ள இடத்திற்கும் புவனேச்வரி அம்மன் சந்நதிக்கும் இடையே சுரங்கப் பாதை ஒன்றிருப்பதாக கூறப்படுகிறது.




நவராத்திரி
விழா
வாழ்த்துக்கள்



இறைபணியில் P.முருகேசன் உரிமையாளர்
சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்
186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

# இளையான்குடி மாற நாயனாருக்கு ரிஷப வாகனத்தில் காட்சியளித்த சிவபெருமான்





சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையான்குடி என்னும் ஊரில் மாறனார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் உழவுத் தொழில் செய்து வந்தார். உழவுத் தொழிலைச் செய்பவர்கள் வேளாளர் என்று அழைக்கப்பட்டனர்.

மாறனாரும் அவருடைய மனைவியும் சிவனாரின் மீது அதி தீவிர பக்தி கொண்டிருந்தனர். சிவனடியார்களுக்கு தொண்டு செய்வது சிவனாருக்கு தொண்டுசெய்வதற்கு ஒப்பாகும் என்பதை எண்ணியே, சிவனடியார்களுக்கு திருவமுது படைத்தலை வழக்கமாகக் கொண்டிருந்தனர் அத்தம்பதியர்.

இளையான்குடியில் பிறந்த மாறனார் ஊரின் பெயரினைக் கொண்டே இளையான்குடி மாற நாயனார் என்று அறியப் படுகிறார். மாறனார் தம்முடைய வீட்டிற்கு வரும் சிவனடிய வர்களை மனமுவந்து வரவேற்பார். பாதங்களை கழுவி, மலர்களால் வழிபாடு நடத்தி, உரிய ஆசனத்தில் அமரச் செய்வார். பின்னர் அவர்களுக்கு அறுசுவை விருந்து அளிப்பார். இம்முறைமை மகேசுவர பூசை என்று அழைக்கப்படும்.

மகேசுவரப் பூசையாலும், சிவனருளாலும் இளையான்குடி மாற நாயனார் உழவுத் தொழிலில் சிறப்புற்று செல்வந்தராக விளங்கினார். இதனால் சிவனடியாருக்கு திருவமுது படைக்கும் பணி அவருக்கு தொய்வில்லாமல் இனிதே நடைபெற்று வந்தது.

செல்வவளத்தினால் மட்டுமின்றி வறுமை காலத்திலும், சிவனடியாருக்கு திருவமுது செய்விக்கும் மாறனாரின் உயர்ந்த உள்ளத்தை, உலகுக்கு வெளிப்படுத்த சிவபெருமான் எண் ணம் கொண்டார். ஆதலால் மாறனாரின் செல்வ வளத்தை படிப்படியாகக் குறைத்தார்.

இளையான்குடி மாற நாயனார் செல்வம் குறைந்த போதிலும், தன்னுடைய நிலபுலன்களை விற்று சிவனடியார்களுக்கு திருவமுது செய்வித்து வந்தார்.

மாறனாரின் செல்வ வளம் எல்லாம் குறைந்து வறுமை முற்றியது. தன்னுடைய உறவினர்கள் மற்றும் சுற்றத்தார்களிடத்து கடன் பெற்று ,அடியவர்களுக்கு திருவமுது செய்வதைத் தொடர்ந்தார் இளையான்குடி மாற நாயனார்.

அப்போது ஒருநாள் குத்தகை வயலில் நெல்லை விதைத்திருந்தார் மாறனார். அவரிடம் உணவு சமைக்க அரிசி, பருப்பு உட்பட எந்தப் பொருளும் இல்லை. அவரும் மனைவியும் பட்டினியுடன் இருக்க வேண்டிய நிலை. நல்லவேளையாக அன்று சிவனடியார் யாரும் அவர் வீட்டிற்கு வரவில்லை.

இரவு வந்தது. ஊர் அடங்கியது; திடீரென இடி மின்னலுடன் மழை பெய்யத் தொடங்கியது. நீண்ட நேரம் ஆகியும் மழை நிற்காமல் தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. அப்போது சிவபெருமான் சிவனடியாராக வேடமிட்டு மாறனார் வீட்டினைத் தட்டினார்.

கதவைத் திறந்த மாறனார் சிவனடியாரைப் பார்த்ததும் மகிழ்சியடைந்தார். அவரை இன்முகத்தோடு வரவேற்று துடைக்கத் துண்டும், மாற்று உடையும் கொடுத்தார். அன்போடு ஆசனத்தில் அமரச் செய்தார்.

“ஐயா, சற்று பொறுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் சூடாக திருவமுது செய்கிறோம்” என்று சிவனடியாரிடம் வேண்டுகோள் விடுத்தார் மாறனார்.

“சரி, நானும் இங்கேயே சற்று ஓய்வெடுத்துக் கொள்கிறேன்.” என்றபடி அங்கேயே படுத்தார் சிவனடியார்.

அடியவருக்கு திருவமுது செய்விக்க என் செய்வது எண்ணிவாறு மனைவியிடம் சென்று அதனை தெரிவித்தார்.

மாறனாரின் மனைவியார் “திருவமுது செய்விக்க உணவுப் பொருட்கள் ஏதும் நம்மிடத்தில் இல்லை. இந்த மழை நேர இரவில் சுற்றதார்களிடம் உணவுப் பொருட்களை சென்று வாங்கி வரவும் இயலாது. நான் வேண்டுமானால் ஒரு யோசனை சொல்கிறேன். இன்று காலையில் விதைத்த நெல் மழைநீரில் மிதந்து கொண்டு இருக்கும். அதனைத் தாங்கள் எடுத்து வந்தால் நான் அதனை பதமான சோறாக மாற்றித் தருகிறேன்.” என்றார்.

விதை நெல் என்பது உழவுக்கு மூலாதாரம். அதனை அரித்து எடுத்து விட்டால் நெற்பயிர் எவ்வாறு முளைத்து பலன் கொடுக்கும்? என்பதையெல்லாம் மாறனார் யோசிக்கவில்லை.

மனைவியின் திட்டத்தைக் கேட்டதும் “எங்கே நம்மால் சிவனடியாருக்கு திருவமுது படைக்க முடியாமல் போய் விடுமோ? என்ற அச்சம் என் மனதில் இருந்து கொண்டே இருந்தது. நீயோ சரியான யோசனை சொன்னாய். நீ சொன்னபடியே விதை நெல்லை எடுத்து வருகிறேன்.”

என்றபடி கையில் கூடையுடன் கிளம்பிச் சென்றார் மாறனார்.

மழைநீரானது வயலுக்கு செல்லும் வழியெங்கும் சூழ்ந்திருந்தது. பழகிய பாதையானாலும் மாறனார் காலால் தடவியவாறே தடுமாறியபடியே வயலைச் சென்றடைந்தார்.

தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த நெல் விதைகளை அரித்து எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார். அதற்குள் மாறனாரின் மனைவியார் கொல்லைப்புறத்தில் இருந்த கீரைகளைப் பறித்து சுத்தம் செய்து வைத்திருந்தார்.


அரிசிக்கு நெல் கிடைத்தாயிற்று. ஆனால் உணவு சமைக்க விறகு இல்லை என்று மனைவியார் கூறினார்.

வெளியே மழை விடாமல் பெய்து கொண்டிருக்கின்றது. எல்லா விறகும் நனைந்து இருக்குமே என்ன செய்வது என்று யோசித்தார். அப்போது வீட்டைத் தாங்கி நிற்கும் தாங்கு கட்டைகள் கண்ணில் பட்டது. உடனே அவற்றை உருவித் தந்தார் மாறனார்.

விதை நெல்லை சமைக்க எடுத்து விட்டதால் அடுத்த வருடம் உணவுக்கு என்ன செய்வது என்ற நிலை. இப்போது தாங்கு கட்டையைப் பிடுங்கியதால் வீடும் இடிந்து விழுமோ என்ற நிலை.

மாறனார் அதைப் பற்றி எல்லாம் நினைக்கவில்லை. மழையில் நனைந்து வந்திருக்கும் அடியாருக்குச் சூடாக உணவு படைக்க வேண்டும் என்ற எண்ணமே, அவர் மனம் முழுவதும் நிறைந்திருந்தது.

மனைவியாரும் இன்முகத்தோடு நெல்லை வறுத்து, குத்தி அரிசியாக்கி சோறு சமைத்தார். கீரையைப் பயன்படுத்தி கறியமுது படைத்தார்.



பின்னர் மாறனாரும், மனைவியாரும் சிவனடியாரை திருவமுது உண்ணபதற்காக எழுப்பினர்.

தனது சோதனையில் மாறனார் வெற்றி பெற்றதால் மகிழ்ந்த சிவபெருமான் உமையம்மையுடன் இடப வாகனத்தில், விண்ணில் பேரொளி வெள்ளமாகக் காட்சி அளித்தார்.

அதனைக் கண்டதும் இளையான்குடி மாற நாயனார் மற்றும் மனைவியார் தரையில் வீழ்ந்து வணங்கினர்.

“மாறனாரே, வறுமையிலும் செம்மையாய் அடியவர்களுக்கு அமுதூட்டிய அன்பரே, நீர் மீண்டும் செல்வசெழிப்போடு வாழ்ந்து, நீண்டகாலம் அடியவர்களுக்கு திருவமுது படைத்து, இறுதியில் எம்மை வந்து சேர்வீர்களாக.” என்று திருவாய் மலர்ந்தருளினார். மாறனாரும், மனைவியாரும் நெடுங்காலம் மகேசுவர பூசையைத் தொடர்ந்து இறுதியில் சிவபாதத்தை அடைந்து இன்புற்றிருந்தனர்.


ஆயுதபூஜை, விஜயதசமி நல்வாழ்த்துக்கள்

அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை

M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்

A.T.T.லாட்ஜ் அகிலா காம்ப்ளக்ஸ்









அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்

பைபாஸ்ரோடு, மானாமதுரை

மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்



L.சுரேஷ் S.அண்ணாமலை

செல்: 98424 68215 / 73737 68215

# இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32அறப் பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதி யாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவபக்தர்களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந்துள்ளார்.

அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரண மாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ் சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்தித்தார். இந்தக் காலகதியைவெல்ல ஒரு வழியையும் கண்ட றிந்து வைத்தி ருந்தார்.



தன் குடிசையைப் புதுப்பிக்கும்போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்து விட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லா விட் டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புற வில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச் சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரி சியாகக் கீழ் விழும்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற் கினங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறு வேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச் சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங் கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண் ணங்களை அப்படியே மறையச் செய்தது. உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஓய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஒரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட் களை மட்டுமல்ல, கோள்களையும் மாற்றும் வல்லமை அவர் களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்டவர் களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குரு பெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது. பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடை பெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.


## இடைகாடார் சித்தர் ஆன்மிக அன்னதான குழு

மாதந்தோறும் பௌர்ணமி அன்றும் காலை 10 மணிக்கு உலக மக்கள் யாவரும் நலமாக வாழ ஹோம பூஜை, அபிஷேகம் மற்றும் அன்னதானமும் சிறப்பாக நடைபெறும், பக்தர்கள் இதில் கலந்து கொண்டு பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.



பௌர்ணமி விழாவில் நீங்களும் பங்கேற்க

**9751555985 / 9751936853**

– இப்படிக்கு, இடைகாடார் சித்தர் ஆன்மிக அன்னதான குழு இடைக்காட்டூர்

மகான் இடைக்காடர் சித்தர் பீடம் மகாத்மா கருணை இல்ல வளாகம் ராயல் சிட்டி அமராவதி பாளையம் திருப்பூர்.



**9952705871**

# மதுரையில் சித்தர்கள் தேடிவந்த திருகூடல்மலை




மதுரையில் ககபுஜண்டர் முதல் கட்டிக்குளம் மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் அவரைதேடி வடக்கில் இருந்து வந்த சோமப்பா சுவாமி சித்தர் என ஏராளமான சித்தர்கள் முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் கோவில் மிக அருகே உள்ளது.

திருகூடல்மலை, இம்மலை புஜண்டர் மலை எனவும் அழைக் கப்படுகிறது. அடிவாரத்தில் உள்ள ராமலிங்க விலாசத்தில் கட்டிக்குளம் மகாசித்தர் சூட்டு கோல் ஸ்ரீ மாயாண்டி சுவாமி, மலைநடுவே ஸ்ரீசோமப்பா சுவாமி மலை உச்சியில் சித்தர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட தண்டபாணி சுவாமி, அதன் அருகில் குகைகோவிலில் ஸ்ரீ நவநீதபெருமாள் ஸ்ரீ வைகுண்ட பெருமாள் சன்னதிகள் உள்ளது.









மற்றும் மலை பாதையில் மிக பெரிய ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. திருகூடல்மலையில் இருந்து சித்தர்கள் ஒரேநேரத்தில் அன்னை மீனாட்சி அம்மன், யானைமலை யோகநரசிம்மர், அழகர் மலை அழகர் ஆகியோரை ஒரே நேரத்தில் தியாணநிலையில் தரிசித்து உள்ளனர். என பக்தர்கள் கூறிவருகின்றனர்.

இப்போதும் இம்மலை உச்சியில் இருந்து மீனாட்சி அம்மன் கோவில் கோபுரங்கள் மற்றும் யானைமலை, அழகர் மலையை காணலாம்.

இக்கோவிலில் சித்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீநவநீதபெருமாள் ஆண்டு தோறும் ஆடி பவுர்ணமி தினத்தில் திருகூடல்மலையில் இருந்து புறப்பட்டு மதுரை நகரைசுற்றி பல ஊர்களில் சென்று மானாமதுரை வரை பக்தர்களுக்கு எழுந்தருளும் பிரம்மோற்சவ விழா நடைபெறுகிறது.

மேலும், ஆடிமாதம் சூட்டுகோல் ராமலிங்கம் ஸ்வாமி, சூட்டுகோல் மாயண்டி ஸ்வாமி, சோமப்பா ஸ்வாமி குரு பூஜைவிழா சங்கடஹர சதுர்த்தி பூஜை தைபூசம், பிரதோஷ வழிபாடு, ஐப்பசி அன்னாபிஷேகம், கார்த்திகை சோமவார விழா, வைகுண்ட ஏகாதசி போன்ற விழா காலங்களில் சிறப்பு யாகம் நடைபெறுகிறது.

தினமும் மதியம் சுவைமிகு அன்னதானம் நடைபெறுகிறது. மதுரை மட்டும்மின்றி தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமிழகத்தில் பல ஊர்களில் இருந்து வந்து சித்தர்கள் தேடிவந்த திருகூடல்மலை ஏறிவந்து சித்தர்கள் அருள்ஆசியும், சித்தர்கள் தவமிருநத குகைகளில் தியானம் செய்து வழிபட்டு செல்கின்றனர். வரும் அக்டோபர் 7 மற்றும் 8ந் தேதியில் கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் 94வது குருபூஜை விழா நடைபெறுகிறது.

திருகூடல்மலை பற்றிய ஆலய தகவல் பற்றி அறிய 9842124841.








aanmeegamalar.com

# மதுரை மீனாட்சியம்மன் கோவிலும் பெயர்களும்



மதுரை மீனாட்சியம்மன் கோவிலை சிவபக்தர்கள், அன்னை குடிகொண்டுள்ள அரண்மனை என்றே போற்று கின்றனர், மதுரையை ஆளும் அரசி மீனாட்சியும், சுந்தரேஸ்வரராக சிவபெருமானும் இத்தலத்தில் இருந்து ஆட்சி செய்வதாக ஐதீகம். நாட்டை ஆளும் அம்பாள் இவ்வாலயத்தின் பிரதான தேவியாக இருப்பதால் இத்திருக் கோவிலை மீனாட்சி சுந்தரேஸ்வரர் அரண்மனை என்ற போற்றுதலுக்குரியதாகும்.

சிதம்பரம், காசி, திருக்காளத்தி வரிசையில்,முக்கியமான நான்காவது தலமாகத் திருவாலவாய் என்றழைக்கப்படும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் திகழ்கிறது. இந்த நகரம் புராண காலத்தில் திருவாலவாய் என்று அழைக்கப் பட்டுள்ளது. இந்தத் தலத்தின் பெயரைக் கேட்டதுமே பேரின்ப நிலை கிடைக்கும். அதனால், சிவபெருமானுடைய முக்தி தலங்களுள் ஒன்றாகவும் இத்தலம் கருதப்படுகிறது. இத்தலத்தினைச் 'சிவன் முக்திபுரம்' என்றும் அழைக்கின்றனர்.

இத்தலம், முக்கியமான சிவத்தலமாக மட்டும் இல்லாமல், அம்பிகையின் 51 சக்தி பீடங்களுள் ஒன்றுமாகும். இதனை, இராசமாதங்கி சியாமள பீடம் என்று அழைக்கின்றனர். இத்தலம் 18 சித்தர்களில் ஒருவரான சுந்தரானந்தரின் சித்தர் பீடமாகவும் உள்ளது. விநாயகரின் அறுபடை வீடுகளில் நான்காவது படைவீடாகவும், சிவபெருமான் மீது பாடப்பெற்ற தேவாரப்பாடல் பெற்ற 274ஆவது சிவாலயமாகவும், 192 ஆவது தேவாரத்தலமாகவும் உள்ளது. தேவாரப் பாடல் பெற்ற தலங்களில், பாண்டிய நாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

தேவலோகத்தின் அரசனான இந்திரனால், இக்கோயில் கட்டப்பட்டது என்பது நம்பிக்கை. இராமர், இலட்சுமணன், வருணன், இந்திரன், தேவர்கள் மற்றும் முனிவர்கள் போன்றவர்களால் இச்சிவாலயம் வழிபடப்பட்டுள்ளது. இத்தலத்தில் தரப்படுகின்ற பிரசாதமான தாழம்பூ குங்குமம், பிரசித்தி பெற்றதாகும்.

தமிழகத்தில் சுமார் 2500 வருடங்கள் பழமையான மதுரை நகரானது, தமிழ் இலக்கிய வரலாற்றிலும், இந்து சமய வரலாற்றிலும் முக்கியத்துவ மானது. மதுரை நகரானது, திருவாலவாய், சிவராச தானி, பூலோக கயிலாயம், கடம்ப வனம், நான்மாடக் கூடல், சிவ நகரம், துவாத சாந்தத் தலம், சமட்டி வித்தியாபுரம், கன்னியாபுரம் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளது. மதுரை திருப்பாற்கடலைத் கடைந்த போது, நாகம் உமிழ்ந்த விசத்தை, இறைவன் 'மதுரம்' (அமிழ்தம்/தேன்) ஆக்கினமையால், இத்தலம் 'மதுரை' என்று பெயர் பெற்றதென்பர்.

நான்மாடக்கூடல் மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டு, சிவபெருமான் தன் சடையிலிருந்து விடுத்த நான்கு மேகங்களும், நான்கு மாடங்களாகக் கூடி, மதுரையைக் காத்ததால் 'நான்மாடக்கூடல்' என்ற பெயரும் மதுரைக்கு உண்டு என்கிறார்கள் சிலர்.

ஆயுதபூஜை விஜயதசமி வாழ்த்துக்கள்

மதுரை கலையகம்

கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.




V.சுந்தரவடிவேல்

Visit: www.maduraikalaiyagam.com

Cell: 98428 05939

27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1

# தீராத நோய்களை குணமாக்கும் பனையப்பட்டி ஞானி புல்லான் சாது சித்தர்




புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள பனையப்பட்டி என்ற ஊரில் அவதரித்து ஏராளமான மக்களுக்கு அவர்களின் மனக்குறையை தீர்த்தும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட தீராத நோய்களையும் தனது சித்த வைத்தியத்தாலும் தவ வலிமையாலும் குணப்படுத்தி வந்தார்.

அங்குள்ள ஆயிரம் பிள்ளையார் கோவிலில் பூஜை செய்து பக்தர்களின் குறைகளை போக்கியதை அறிந்து ஏராளமானோர் பக்தர்கள் அவரை சந்தித்து ஆசி பெற்று வந்தனர் ஞானி புல்லான் சாது சித்தர் ஆயிரம் பிள்ளையார் கோவிலில் தவ அறை அமைத்து இரவு பகலாக தவம் இருந்து வந்தார்.

ஞானி புல்லான் சாது சித்தர் சித்த வைத்தியத்தை கைவந்த கலையாக உடற்கூறை அறிந்து மூலிகைகளை கொண்டும் தவம், யோகசனம் மூலமும் குணப்படுத்தி மக்களிடம் எந்த வித காணிக்கைகளும் இன்றி மக்களின் நோய்களை தீர்த்து வந்து மக்களின் அன்பிற்கு பாத்திரமானார். தவம் தரும் ஞானி புல்லான் சாதுவிற்கு ஜீவ ஒடுக்கம் மற்றும் பிராண பிரதிஷ்டை கடந்த 2012 ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இவர் பூஜை செய்த ஆயிரம் பிள்ளையார் கோவிலுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது ஞானி புல்லான் சாதுவிற்க்கு மாதந்தோரும் சிறப்பு யாகமும், பவுர்ணமி பூஜை வழிபாடும் அன்னதானமும் நடைபெற்று வருகிறது இப்போதும் ஞானி புல்லான் சாது சித்தர் ஜீவ ஒடுக்கத்தை தரிசனம் செய்ய ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். தங்களுக்கும் தங்களை சார்ந்தவருக்கும் ஏற்பட்ட நோய்களை குணமாக்க வேண்டியும் மனம் உருகி வேண்டிச் சென்று நோய்கள் குணமான உடன் ஞானி புல்லான் சாது ஜீவ ஒடுக்கத்திற்கு வருகை தந்து நன்றியுடன் ஏராளமான பக்தர்கள் வழிபட்டு வருவதை பனையப்பட்டியில் இப்போதும் காணலாம்.

ஞானி புல்லான் சாது சித்தர் வழிபாடு பற்றி தெரிந்து கொள்வதற்கு 9787521727 இந்த நம்பருக்கு பக்தர்கள் தொடர்பு கொள்ளலாம்.

ஜெயபாலாஜி சூப்பர் மார்க்கெட்
C.கிருஷ்ணன் வீரம்மாள் அரிமழத்தார் கடை,
4167, கீழராஜவீதி, புதுக்கோட்டை
இறைபணியில்: VRKR.ஜெயபாஸ்கர்
புதுக்கோட்டை பாஸ்கர்:9443411468 செல்: 9566396765
செட்டிநாட்டு பொருள்கள் (பாத்திரங்கள்) அனைத்தும் கிடைக்கும்.
நாட்டுமருந்து வகைகள்
மளிகை, பூஜை பொருள்கள், செட்டிநாடு பலகாரம், ட்ரைபுரூட்ஸ்,
செட்டிநாட்டு பழைய பொருள்கள் அனைத்தும் வாங்கப்படும்

# சித்தத்தை கடக்க பத்தாயிரம் ஜென்மம் கடக்கவேண்டும்



விழிப்பு என்பது மனதின் முதல் நிலை அடுத்த நிலை என்பது சித்தம், இது மனம் உறங்கும் பொழுது தான் விழித்தி கொள்ளும் இதில் தான் முன் ஜென்ம கர்மா செயல்கள், தெய்வங்களின் ஆசிகள், மந்திர உச்சாடன பதிவுகள் மற்றும் பஞ் சபூத கலவையில் ஆனா பூமியில் உள்ள ஆகர்ஷண சக்திகள் நிறைந்து நிற்கும்.

சித்தத்தில் மனம் ஒடுங்கும் பொழுது சக்திதேவியர்கள் வசப் படுவார்கள். இவர்களால் சித்து வேலைகளை செய்யமுடியும். இவர் களின் முதல் படிநிலைகளை மந்திரவாதிகள் என்று நூல்கள் சொல்கிறது. இரண்டாவது நிலைக்கு இவர்கள் செல்லும் பொழுதும் காய சுத்தியும் காயசித்தியும் பெற்று சித்தத்தை கடந்தவர்காளாக உரு மாறுகிறார்கள். இவைகள் எல்லாம் ஒரு மனிதனுக்கு சாத்தியமாக பத்தாயிரம் ஜென்ம பிறப்புகள் வேண்டும் என காகபுஜண்டர் உரைக்கிறார்.



# மாங்கல்ய வரம் தரும் முனிவர்

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர் மாங்கல்ய முனிவர். இவரே அகத்தியர் – லோபமுத்ரா, வஷிஸ்டர் – அருந்ததி ஆகியோரின் திருமணங்களை நடத்தி வைத்தவர். இந்த முனிவரை வணங்கினால் பெண்களுக்கு மாங்கல்ய பலம் அதிகரிக்கும். இவர் திருச்சி மாவட்டம் லால்குடிக்கு அருகேயுள்ள இடையாற்று மங்கலம் மாங்கல்யேஸ்வரர் கோவிலில் அருள் பாலிக்கிறார்.

உத்திர நட்சத்திரத்தன்று அமிர்த யோகத்தில் மாங்கல்ய முனிவர் இத்தலத்திற்கு வருவதாக நம்பிக்கை. அப்போது மாங்கல்யேஸ்வரர் மற்றும் மங்களாம்பிகையை வணங்கும் மாங்கல்ய முனிவர், இதே நேரத்தில் இங்கு வரும் பெண்களுக்கு மாங்கல்ய பலம் அளிக்க வேண்டும் என வேண்டுவாராம். ஆனியில் வரும் உத்திரம் சிறப்புடையது. அது அமிர்த யோகத் துடன் கூடி வருவதால் இந்நந்நாளில் இடையாற்றுமங்கலம் மாங் கல்யேஸ்வரரை வணங்குவது மிகவும் சிறப்பாகும்.




ஆயுதபூஜை, விஜயதசமி வாழ்த்துக்கள்

Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE

எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அருண் ஏஜன்ஸீஸ்
பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

MAK LUBRICANTS

டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ் சிவகங்கை மாவட்டம்.

Emergency No: 9443274648

1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.

போன் : 04574-264300, 265710

குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட் வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.

# குலத்தை காக்கும் குலதெய்வ வழிபாடு





குடும்ப உறவுகள் நெருங்கிய உறவினர்கள் ஒன்று கூடி நடத்தும் வழிபாடுகளில் குல தெய்வ பூஜை முதன்மையானது. இது குடும்ப ஒற்றுமைக்கும் வரப்பிரசாதமாக அமைகிறது. இந்த பூஜையை சில குடும்பங்களில் பகலில்நடத்துவார்கள். அது அந்த குலதெய்வத்தின் வழக்கப்படி அமைகிறது. குடும்பத்துக்குள் தீராத பிரச்சினைகள் இருந்தால் அதை தீர்த்து வைப்பதில் குல தெய்வ பூஜை முக்கிய பங்கு வகிக்கிறது. ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு மனக்குழப்பத்தில் இருக்கும்போது அனைத்து சித்தர்கள் குலதெய்வத்தை வழிபடுங்கள் அனைத்தும் சரியாகும்' என்று கூறி உள்ளனர்.

ராகவேந்திரர், மகாபெரியவா, சாய் பாபா போன்ற குரு மார்கள் குலதெய்வம் வழிபாடு தான் முக்கியம் என்று வலியுறுத்தி உள்ளனர்.



ஒரு சில இடங்களில், எந்தவொரு நல்ல காரியத்தை செய்வதாக இருந்தாலும் முதலில் குலதெய்வ வழிபாடு முடித்துவிட்டு ஆரம்பித்தால் அது வெற்றியாக முடியும் என்பது காலம் காலமாக பின்பற்றப்படும் நடைமுறை.

வேண்டுதல்களை நிறைவேற்றி வைப்பதில் குலதெய்வத் திற்கு நிகர் எதுவுமில்லை. மாதம் ஒரு முறை குலதெய்வத்தை தேடிச்சென்று தான் கும்பிடுவார்கள். அப்படித்தான் வழிபட வேண்டும் என்ற நியதியை முன்னோர்களின் வழிமுறையை பின்பற்றி தொடருகிறார்கள்.

குலதெய்வத்தை ஒருமுறை மட்டும் தான் கும்பிட வேண்டும் என்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் தாராளமாக கும்பிடலாம். பிரச்சினையில் சிக்கி முடியாமல் தவித்து கொண்டிருப்பவர்களிடம் ஒருமுறை குல தெய்வத்தை வழிபட்டு வாருங்கள். உங்கள் வாழ்க்கையில் இருக்கும் பிரச்சினைகள் முடிவுக்கு வரும் என்று சொல்வார்கள்.

வெளியூரில் இருந்தால் ஒருமுறை சென்று வழிபட்டு வரலாம். உங்களுடைய நட்சத்திரம் வரும் நாட்களில் குலதெய்வ வழிபாடு மேற்கொள்ளலாம். அவ்வாறு இல்லை என்றால் பவுர்ணமி அல்லது அமாவாசை அன்று வழிபடலாம். மற்ற தெய்வத்தை பொருத்தவரை அர்ச்சனை செய்து சாமி கும்பிடுவோம். ஆனால் குலதெய்வத்துக்கு பொங்கல் வைத்து சாமி கும்பிட வேண்டும். எந்த தோஷம் இருந்தாலும் குல தெய்வ வழிபாட்டைத்தான் மேற்கொள்ள வேண்டும். பரிகாரங்கள் எல்லாம் அதற்கு பிறகு தான் என்பதை மனதில் வையுங்கள்.


குருவே சரணம் ! ஸ்ரீ திரௌபதியம்மன் துணை குருவே துணை !!

J.P. ருத்ராச்சா

ருத்ராச்சம் S. ஜெயபிரகாஷ், குருசாமி
மாவட்ட செயல் தலைவர்,
அகிலபாரத ஐயப்ப பக்தர்கள் பேரவை, தருமபுரி.
செல் : 9790595440, 8778631314

எங்களிடம் ருத்ராச்சம் ஒரு முகம் முதல் 21 முகம் வரை கிடைக்கும்.
ஒரிஜினல் கருங்காலி மாலை, ஸ்படிக மாலை, வலம்புரி சங்கு
மற்றும் பூஜைக்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்.

ஸ்ரீ பராசரர் ஜோதிட மய்யம்

திருமண பொருத்தம், ஜாதகம் எழுத, எண்கணிதம் பார்க்க



கொன்னக்குளம் ஜோதிட ரத்னா
N.கரிகாலன் B.Com
PH: 9585795237




மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

181 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன

08.10.2024
சிறப்பிதழ்



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V.நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

# சென்னையில் இருக்கும் ஜீவசமாதிகளும், இருப்பிடமும்






### திருவொற்றியூர்

பட்டினத்தார் கடற்கரையையொட்டி பட்டினத்தார் கோவில் வீதி. பாடகச்சேரி ராமலிங்கசாமிகள் பட்டினத்தார் கோவில்வீதியில் இவரது பெயருள்ள மடம் ஐகோர்ட் சாமி என்ற அப்புடுசாமி பாடகச்சேரி ராமலிங்கசாமிகள் மடத்துள் இருக்கிறது. அருள்மிகு யோகீஸ்வரர் சாமி வடிவுடையம்மன் கோவில் அருகில்தட்சிணாமூர்த்தி ஆலயம் ஸ்தாபித்தவர். பரஞ்சோதி மகான் டோல்கேட் பஸ்ஸ்டாப் அருகில், தங்கம் மாளிகைஅருகில். ஞானப்பிரகாச சாமிகள் வடக்குமாட வீதி 145/30 இல் சிவாமிர்தஞானஆசிரமத்தில் பஞ்சலோக சிலை பிரதிஷ்டை. மவுனகுருசாமிகள் கடற்கரையோரம் சமாதி கோவில். முத்துக்கிருஷ்ண பிரம்மம்ஆஞ்சநேயர் கோவில் பஸ் ஸ்டாப் அருகில் உள்ள அருணாச்சலேஸ்வரர் கோவில் எதிரே சமாதி. ஞானசுந்தர பிரம்மம் முத்துக்கிருஷ்ண பிரம்மம் சமாதி அருகில் ஞானசுந்தர பிரம்மம் சமாதி.

### ராயபுரம்

குணங்குடி மஸ்தான் சாயபு காய்கறி மார்க்கெட் பின்புறம் பிச்சாண்டி தெருவில் உள்ளது. ஞானமாணிக்கவாசக சிவாச்சாரியார் சித்தர் மன்னார்சாமி கோவில் தெரு பழைய பாலம் இறக்கத்தில் உள்ள ருத்ர சோமநாதர் கோவிலில் சமாதி.

### வியாசர் பாடி

சிவப்பிரகாச சாமி இரவீஸ்வரர்மரகதாம்பாள் கோவிலில் சமாதி கோவில். கரபாத்திர சிவப்பிரகாச சாமி 1வதுதெரு சாமியார் தோட்டம் அம்பேத்கர் கல்லூரி அருகில்

### பெரம்பூர்:

அந்துகுருநாத சுவாமிகள் மாதவரம் நெடுஞ்சாலை பிரசன்ன விநாயகர் கோவிலில் சமாதி கோவில் பஞ்சமுக வடிவமும் உள்ளது. மதனகோபாலசாமி மேல்பட்டி பொன்னப்பமுதலி தெரு ஈஸ்வரி கல்யாண மண்டபம் எதிரில் சமாதி கோவில் சந்திர யோகி சுவாமி மங்களபுரம் ஐந்து லைட் அருகில். வேர்க்கடலை சுவாமி அய்யாவு தெரு, திரு.வி.க.நகர். மதுரை சாமி செம்பியம் வீனஸ் தியேட்டர் 2 வது குறுக்குத் தெரு வலது பக்கம் மதுரை சாமி மடத்தில். மயிலை நடராஜ சுவாமி கொளத்தூர் பெரவள்ளூர் செல்லியம்மன் கோவில் பின்புறம்.

### ஓட்டேரி

ஆறுமுகச்சாமி 173/77 டிமலஸ் சாலை, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு ஓட்டேரி மயானத்தில் சமாதி கோவில்.

### புரசைவாக்கம்

வீரசுப்பையா சுவாமி புவனேஸ்வரி தியேட்டர் எதிரில்52,பெரம்பூர் பேரக்ஸ் ரோடு மடத்தில் சமாதி கோவில். ஈசூர் சச்சிதானந்த சாமி=கொசப்பேட்டை சச்சிதானந்தா தெரு (வசந்தி தியேட்டர் அருகில்) சமாதி கோவில்.

### எழும்பூர்

மோதி பாபா 422, பாந்தியன் சாலை போலீஸ் கமிஷனர் அலுவலகம் எதிரில் தர்கா. அனந்த ஆனந்த சுவாமி மற்றும்சபாபதி சுவாமி பாலியம்மன் கோவில் பின்புறம் சாமியார் தோட்டத்தில் இருவரது சாமதி கோவில்ஐப்பசி திருவாதிரை நட்சத்திரத்தன்று வருடாந்திர குருபூஜை.

### நுங்கம்பாக்கம்

கங்காத சுவாமி ஹாரிங்டன் ரோடு 5 வது அவென்யூ ஜெயவிநாயகர் கோவிலில் சமாதி. நாதமுனி சாமி ஹாரிங்டன் ரோடு, பச்சையப்பன் கல்லூரி பின்வாசல் அருகில் நாதமுனி மடத்தில் சமாதி கோவில். பன்றிமலை சாமி 5, வில்லேஜ் ரோட்டில் 'ஓம்நமச்சிவாய' என்ற பெயரில் ஆஸ்ரமத்தில் சமாதி. ஆதிசேஷானந்தா நுங்கம்பாக்கம் காவல்

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.







நிலையத்தின் பின்புறம் ஆதிசே ஷானந்தா கோவிலில் சமாதி. வீரமாமுனிவர் நுங்கம்பாக்கம் புஷ்பா நகர் காவல்நிலையம் எதிரில் அசலத் தம்மன் கோவில்.

**கோடம்பாக்கம்:**

ஸ்ரீபரமஹம்ஸ ஓங்கார சாமி=அசோக் நகர்சாமியார் மடம் டாக்டர் சுப்பராயன் நமர் சாமியர் மடம் ஞானோதய ஆலயம் ஸ்ரீபரமஹம்ஸ ஓங்கார சாமிபீடம்.

**வடபழனி:**

அண்ணாசாமி, ரத்தினசாமி, பாக்கியலிங்கசாமிகள் வடபழனி முருகன் கோவில் உருவாக இந்த மூவரும் காரண கர்த் தாக்கள். இவர்களது சமாதி கோவில் முருகன் கோவில் பின்புறம் நெற்குன்றம் பாதையில் வள்ளி திருமண மண்டபம் அருகில்.

**மைலாப்பூர்**

திருவள்ளுவர்வாசுகி அம்மையார் லஸ் அருகில் திருவள்ளுவர் கோவிலில். அப்பர் சாமிகள் 171, ராயப்பேட்டை ஹைரோடு சமஸ்க்ருத கல்லூரிஎதிரில், மைலாப்பூர் அப்பர் சாமிகள் சமாதி உள்ளது. குழந்தைவேல் சுவாமி சித்திரகுளம் எஸ்.டி.பி.கில்டு பில்டிங் கில் இருக்கிறது. முத்தையா சாமிகள் குழந்தைவேல் சாமிகள் சீடர் அவரது சமாதி அருகில்.

**ஆலந்தூர்**

தாடிக்கார சுவாமி ஆலந்தூர் ஈ.பி.அலுவலகம் தாடிக்கார சாமி தெருபழைய எண்:2324 இடையே சந்து. குழந்தை வேலபரதேசி ஆலந்தூர் ஈ.பி.அலுவலகம் பின்புறம்53,சவுரித் தெரு, எஸ்.ஆர்.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வாயிலுக் குக் கீழ்ப்புறம் சமாதி கோவில்.

**கிண்டி**

சாங்கு சித்தர் சிவலிங்க நாயனார் எம்.கே.என்.ரோடு 36 ஆம் எண்சாங்கு சித்தர் சிவலிங்கநாயனார் சமாதிகோவில் சிவலிங்க பிரதிஷ்டை. இத்துடன் இவரது சீடர்கள் ஸ்ரீகொல்லாபுரி சாமி, ஸ்ரீஏழுமலை சாமிகளின் சமாதி.

சத்யானந்தா கோழீபீ சித்தர் பஸ் ஸ்டாப் அருகில் உள்ள சாய்பாபா கோவில் வளாகத்தில்.

**வேளச்சேரி**

சிதம்பரச்சாமி என்ற பெரியசாமி காந்தி சாலை திருப்பம் 1,வேளச்சேரி மெயின் ரோடுசிவலிங்க பிரதிஷ்டை.

**ராஜகீழ்ப்பாக்கம்**

சச்சிதானந்த சற்குரு சாமிகள் அகண்ட பரிபூரண சச்சிதா னந்த சபையின் சமாதி.

**பெருங்குடி**

நாகமணி அடிகளார் கந்தன் சாவடி பஸ்ஸ்டாப் நாகமணி அடிகளார் சாலை அம்மன் கோவிலுகுள்.

**நங்கநல்லூர்:**

மோனாம்பிகைஞானாம்பிகை சாதுராம்

இம்மூவரின் சமாதி பிளாட் 21,பொங்கி மடம்(மாடர்ன் உயர்நிலைப் பள்ளி அருகில்)ஸ்டேட் பாங்க் காலனி

**திருவான்மியூர்**

பாம்பன் சுவாமிகள்கலா சேத்ரா அருகில் திருமட வளாகத்துள் ஸ்ரீபாம்பன் சுவாமிகள் சமாதி ஆலயம்.ஸ்ரீ முருகக்கடவுள் பிரதிஷ்டை. வால்மீகி மருந்தீஸ்வரர் கோவில் எதிரில் சிறிய கோவில். சர்க்கரை அம்மாள்75,கலா சேத்ரா ரோடு,

**சிட்லப்பாக்கம்:**

சாயி விபூதி பாவா= 83,முதல் மெயின் ரோடு,ஹெச்.சி.நகர் சிட்லப்பாக்கம் பாலம் இறக்கத்தில் சமாதி கோவில்அருகில் குமரன் குன்றம் மலைக்கோவில்.

**தாம்பரம்:**

எதிராஜ ராஜயோகி ஊரப்பாகம் அருகில் கரணை புதுச் சேரியில் இவரது சமாதி கோவில் இருக்கிறது.

**படப்பை:**

துர்கை சித்தர் ஜெயதுர்கா பீடம் கோவில். ஸ்ரீமத் சதானந்த சாமி ஆலம்பாக்கம் சதானந்தபுரம் பெருங்களத்தூரில்சமாதி கோவில்.

**புழல்**

கண்ணப்ப சாமி புழல் சிறைச்சாலையை அடுத்து காவாங் கரையில் கண்ணப்பசாமிகள் ஆசிரமம் இவருக்கு அருகில் இவரது சீடர் கோவிந்த சாமியின் ஜீவசமாதி.

**காரனோடை**

மல்லையா சாமிகள் காரனோடை தாண்ட குசஸ்தல ஆற்றுப்பாலத்தின் கீழ் வடகரையில் சமாதிகோவில் அமைந் திருக்கிறது.

அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் காரனோடை கோபி கிருஷ்ணா தியேட்டர் எதிரில் ஆத்தூர் சாலையில் இவரது சமாதி கோவில் இருக்கிறது

**அலமாதி**

மார்க்கண்டேய மகரிஷி அலமாதீஸ்வரர் கோவிலுக்குள் சமாதி அமைந்திருக்கிறது.

கோவணச்சாமி அலமாதீஸ்வரர் கோவில் அருகில் சமாதி இருக்கிறது.

ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை
மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்
பீனாஸ் பத்திர எழுத்தகம்

பத்திர எழுத்தர், மானாமதுரை
Prop.N.P.வேல்முருகன் B.Com
State Document Writer
செல்: 99526 39497
95851 88741




# SREE JANAKI TOURS

**DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS**

**SPECIAL CARE FOR SENIOR CITIZEN**

NEW 24, REDDY STREET,
VIRUGAMBAKKAM,
CHENNAI 600092
(OPP JAINS KENCES RETREAT)

PHONE: 044 24994450
90942 79625
90942 79626


e-mail:
srijanaki.tours@gmail.com

**SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)**

- KOLLUR, UDUPI TOUR
- KERALA TEMPLE TOUR
- SHIRIDI, MANTRALAYAM
- NAVAGRAHA TOUR
- KASI, GAYA, ALLAHABAD & PURI
- AHOBILAM & HILL STATION

**ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)**

- THIRUVANNAMALAI GIRIVALAM
- SRIPURAM GOLDEN TEMPLE
- SURUTAPALLI PRADASHOM
- SAKTHI TOUR
- THENNANGUR
- KANCHIPURAM & BALAJI DARSHAN





# சாந்தி முருகன் திருமண மஹால்

மானாமதுரை




மதுரை-ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில்
அனைத்து வசதிகளுடன் இயற்கை எழில்மிகு
இடத்தில் நல்ல குடிநீர் வசதி,
கார் பார்க்கிங் வசதியுடன் உள்ள மஹால்.

உரிமை: M.சாந்திமுருகன்

செல்: 99409 69649

aanmeegamalar.com

# சித்தர்கள் ஜீவ சமாதியான இடம் அவர்கள் வாழ்ந்த நாட்கள்



1. **அகஸ்தியர்:** 5 யுகம் 7 நாள் வாழ்ந்தார். பாபநாசத்தில் சமாதியானார்.
2. **பதஞ்சலி:** 4 யுகம் 48 நாள் வாழ்ந்தார். இராமேஸ்வரத்தில் சமாதியானார்.
3. **கமலமுனி:** 4000 வருடம் 48 நாள் வாழ்ந்தார். திருவாரூரில் சமாதியானார்.
4. **திருமூலர்:** 3000 வருடம் 13 நாள் வாழ்ந்தார். சிதம்பரத்தில் சமாதியானார்.
5. **குதம்பை சித்தர்:** 1800 வருடம் 16 நாள் வாழ்ந்தார். மாயவரத்தில் சமாதியானார்.
6. **கோரக்கர்:** 880 வருடம் 11 நாள் வாழ்ந்தார். பொய்கை நல்லூரில் சமாதியானார்.
7. **தன்வந்திரி:** 800 வருடம் 32 நாள் வாழ்ந்தார். வைத்திஸ்வரன் கோயிலில் சமாதியானார்.
8. **சுந்தரானந்தர்:** 800 வருடம் 28 நாள் வாழ்ந்தார். மதுரையில் சமாதியானார்.
9. **கொங்கணர்:** 800 வருடம் 16 நாள் வாழ்ந்தார். திருப்பதியில் சமாதியானார்.
10. **சட்டமுனி:** 800 வருடம் 14 நாள் வாழ்ந்தார். திருவரங்கத்தில் சமாதியானார்.
11. **வான்மீகர்:** 700 வருடம் 32 நாள் வாழ்ந்தார். எட்டுக்குடியில் சமாதியானார்.
12. **ராமதேவர்:** 700 வருடம் 06 நாள் வாழ்ந்தார். அழகர்மலையில் சமாதியானார்.
13. **நந்தீஸ்வரர்:** 700 வருடம் 03 நாள் வாழ்ந்தார். காசியில் சமாதியானார்.
14. **இடைக்காடர்:** 600 வருடம் 18 நாள் வாழ்ந்தார். திருவண்ணா மலையில் சமாதியானார்.
15. **மச்சமுனி:** 300 வருடம் 62 நாள் வாழ்ந்தார். திருப்பரங்குன்றத்தில் சமாதியானார்.
16. **கருவூரார்:** 300 வருடம் 42 நாள் வாழ்ந்தார். கரூரில் சமாதியானார்.
17. **போகர்:** 300 வருடம் 18 நாள் வாழ்ந்தார். பழனியில் சமாதியானார்.
18. **பாம்பாட்டி சித்தர்:** 123 வருடம் 14 நாள் வாழ்ந்தார். சங்கரன்கோயிலில் சமாதியானார்.

## ஆயுள் வேண்டி வணங்க வேண்டிய கோவில்கள்...

1. அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில், திருக்கடையூர்,
2. அருள்மிகு எமனேஸ்வரமுடையார் திருக்கோவில், எமனேஸ்வரம், பரமக்குடி
3. அருள்மிகு காலகாலேஸ்வரர் திருக்கோவில், கோவில்பாளையம்,
4. அருள்மிகு சித்திரகுப்தசுவாமி திருக்கோவில், காஞ்சிபுரம்,
5. அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோவில், வேளச்சேரி,
6. அருள்மிகு ஸ்ரீலிவனேஸ்வரர் திருக்கோவில். திருப்பைஞ்ஞீலி.
7. அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோவில், வாஞ்சியம்



# எட்டு திக்குகளை ஆளும் சக்திகள்

1. கிழக்கு பிராம்மி
2. தென்கிழக்கு கௌமாரி
3. தெற்கு வராஹி
4. தென்மேற்கு சியாமளா
5. மேற்கு வைஷ்ணவி
6. வடமேற்கு இந்திராணி
7. வடக்கு சாமுண்டி
8. வடகிழக்கு மகேஸ்வரி



**பிராம்மி:** பிரம்ம தேவரின் அம்சமும் சக்தி வடிவமே பிராம்மி என்று அழைக்கப்படுகிறாள்.

கிழக்கு திசையின் சக்தி வடிவம். பிராமி சக்தியை வணங்குவதால் குழந்தைப் பேறும், கலை ஞானமும் உண்டாகும்.

**கௌமாரி:** சரவணனின் அம்சமாக அவதரித்தவள் கௌமாரி என்று அழைக்கப் படுகிறாள். தென் கிழக்கு திசையின் சக்தி வடிவம். கௌமாரி தேவியை வழிபடுவதால் பதவி உயர்வும் மனதில் இருக்கும் பயமும் அகலும்.

**வராஹி:** விஷ்ணுவின் அவதாரமான வராக மூர்த்தியின் அம்சமாக இருப்பவர் வராஹி. தெற்கு திசையின் சக்தி வடிவம். வராஹி தேவியை வணங்கி வருவதால் எதிரிகளை அழித்து வெற்றி கொள்ளலாம். மனதில் தைரியம் பிறக்கும்.

**சியாமளா:** மீனாட்சி அம்மனின் அவதாரமாக திகழ்பவள் சியாமளா தேவி. தென் மேற்கு திசையின் சக்தி வடிவம். சியாமளா தேவியை வழிபடுவதால் சகல கலைகளிலும் தேர்ச்சி மற்றும் அறிவுக்கூர்மை உண்டாகும்.

**வைஷ்ணவி:** விஷ்ணுவின் அம்சமாக தோன்றியவர். நாராயணி என்றும் அழைக்கப் படுபவள். மேற்கு திசையின் சக்தி வடிவம். வைஷ்ணவியை வழிபடுவதால் உடல் ஆரோக்கியமும் எண்ணங்களில் மேன்மையும் உண்டாகும்.

**இந்திராணி:** தேவலோகத்தின் அதிபதியான இந்திரனின் அம்சமாக தோன்றியவர் இந்திராணி. வடமேற்கு திசையின் சக்தி வடிவம். இந்திராணியை வழிபடுவதால் நல்ல வாழ்க்கை துணை அமைத்து தருவார். பணத் தட்டுப்பாடு குறையும்.

**சாமுண்டி:** ருத்தரனின் அம்சமாக தோன்றியவர். எந்த விதமான சக்தி யாலும் கட்டுப்படுத்த முடியாதவர்.

வடக்கு திசையும் சக்தி வடிவம். சாமுண்டியை வணங்கி வருவதால் எடுத்த செயலில் எவ்விதமான இன்னலும் இன்றி வெற்றியும், பாதுகாப்பும் உண்டாகும்.

**மகேஸ்வரி:** சிவபெருமானின் அம்சமாக திகழக்கூடியவர் மகேஸ்வரி. வடகிழக்கு திசையின் சக்தி வடிவம். மகேஸ்வரியை வழிபடுவதால் ஐயங்கள் மற்றும் கோபம் நீங்கும். சகல பிரச்சனைகளையும் தீர்த்து வைக் கக் கூடியவர்.

இவ்விதம் சகல சௌபாக்கியங் களையும் அளிக்கும் அஷ்ட திக் சக்திகளை வழிபட்டு வாழ்க்கையில் உள்ள எல்லா வளமும், சிறப்பும் பெற்று முன்னேறுவோம்.


காயத்ரி ஆவண தயாரிப்பு மையம்
ந.சிவராமகிருஷ்ணன்
பத்திர எழுத்தர்


அரசு உரிமம் எண்
A437/ TRP/1993
Cell : 98422 57449 / 99947 82295
7/22, கருணாநிதி நகர், சௌரிபாளையம், கோயமுத்தூர் - 641 028

சத்துமாவு
41 வகையான சிறுதானியங்களில் தரமான முறையில் தயாரிக்கப்பட்டது
குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமான இயற்கை உணவு, எந்தவித கலப்பட இரசாயன கலப்படமும் இல்லை ஆரோக்கியத்தை காக்கும் உணவு.
பாரம்பரிய முறையில் சிறுதானிய வகைகளைக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது.


கீதாசமையல்
SPECIAL FOOD
fssai REGISTRATION 22424543000080
7550199561
geethasamayalspacialfood@gmail.com
home made products
41 ingredients




aanmeegamalar.com

# சித்தர்கள் வாழ்ந்த சிவகங்கை மாவட்டம்

பதினெண்சித்தர்கள் மகான்கள் இறப்பு நிலை அடையாமல் பல்வேறு இடங்களில் அரூபமாகவும் ஏதாவது ஒரு ரூபத்தில் இன்றைக்கும் வாழ்ந்து வருகின்றனர். இதில் தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஊர்களில் ஏராளமான சித்தர்கள் மகான்கள் வாழ்ந்து பக்தர்களுக்கு வரங்கள் வழங்கி ஆசி வழங்கி உள்ளனர்.

மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் பகுதியில் சூட்டுக் கோல் ராமலிங்க சுவாமிகள் பொதிகை மலை பகுதியில் இருந்து வந்து இங்கு வாழ்ந்து பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தி உள்ளார்.

இக்கோவிலில் இன்றும் தினசரி ஆறு வேளை பூஜை நடைபெற்று வருகிறது. இது நீதி வழங்கும் கோவிலாக உள்ளது.

இங்கு நடைபெறும் சமரச தீர்வுகளிகள் ராமலிங்க சுவாமிக்கு கட்டுப்பட்டு தவறு செய்தவர்கள் திருந்தி நீதிக்கு கட்டுப்பட்டு செல்கின்றனர்.

இதன் அருகில் இவருடைய சீடர் மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் முதல் ஜீவ ஒடுக்க கோவில் உள்ளது. இங்கு தான் சீடர்க்கு தன் உள்ளங்கையில் மாயாண்டி சுவாமி காசி ராமேஸ்வரத்தை காண செய்து சீடர்க்கு ஆயுளை அதிகரிக்க செய்த இடமாக உள்ளது.

ராமலிங்க சுவாமி கோவில் மாயாண்டி சுவாமி தவசாலைக்கு செல்ல மதுரை ராமேஸ்வரம் சாலையில் உள்ள முத்தனேந்தல் என்னுமிடத்தில் பஸ் வசதி ஆட்டோ வசதிகள் உள்ளது. இதே போல் முத்தனேந்தலில் இருந்து வைகை ஆற்றை கடந்தால்

இடைக்காட்டூரில் பதினெண் சித்தர்களில் ஒருவரான இடைக்காடார் சித்தர் கோவில் உள்ளது.இங்கு அவர் பிரதிஷ்டை செய்த நவகிரகங்களை பக்தர்கள் இன்றும் தரிசனம் செய்யலாம்.


மானாமதுரை வைகை ஆற்று கரையில் உள்ள ஸ்ரீ ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் மனித வாழ்வில் ஏற்படும் சங்கடங்களை போக்கும் ஸ்ரீ சற்குரு சதாசிவபிரேம்ந்திராள் அதிஷ்டானம் உள்ளது.

இங்கு உலகில் உள்ள கர்நாடக இசை கலைஞர்கள் வந்து இசை ஆராதனை செய்து வழிபாடு செய்து செல்கின்றனர்.

இதே போல சிவகங்கை அருகே உள்ள வேம்பத்தூரில் வாழ்ந்து பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தி வரங்கள் தரும் ஸ்ரீ வாராஹி அம்மனுக்கு பாமாலை பாடிய கவிராஜ பண்டிதர்க்கு இங்கு உள்ள ஸ்ரீ ஆவுடைஅம்மன் கைலாசநாதர் கோவிலில் சன்னதி உள்ளது.இவருடைய அதிஷ்டானம் வீர சோழன் கிராமத்தில் உள்ளது.

மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரிய நாச்சி அம்மன் கோவிலில் சித்தர் முத்து







வடுகநாதர்க்கு தனி சன்னதி உள்ளது.

குறிச்சியில அவதரித்து சிங்கம்புணரியில் வாத்தியார் முத்துவடுகநாதர்க்கு ஜீவசமாதி கோவில் உள்ளது.

மானாமதுரையில் இருந்து முப்பது கி.மீட்டர் தொலைவில் உள்ள திருச்சுழியில் திருவண்ணாமலையில் ஜீவசமாதியான ரமண மகரிஷி அவதரித்த திருத்தலம் உள்ளது.

இடையமேலூரில் மாயாண்டி சுவாமி கோவிலும் சிவகங்கை தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மதகு பட்டியில் தான் சமாதி அடைய போவதை அரிந்து சமாதி அமைத்து ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தி ஆசிகளை வழங்கி வாழ்ந்து மறைந்த ஓம் ஸ்ரீ பிரம்மரிஷி மகேந்திர கிரி சுவாமிகள் ஜீவசமாதி கோவிலும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. மனித அவதாரம் எடுத்த ஸ்ரீ ராமர் ஆஞ்சனேயர்க்கு ராமாயண காலத்தில் உபதேசம் செய்த இடமாக மானாமதுரை உள்ளது. இதே போல் சுவாமி விவேகானந்தர் மகாத்மா காந்தி மகான்வந்து சென்ற இடமாககவும். ஏராளமான சித்தர்கள் மகான் கள் அவதரித்த இடமாகவும் சிவகங்கை மாவட்டம் உள்ளது.


மக்களின் பேரதரவுடன் சரித்திரம் வாய்ந்த
சிவகங்கையில் மீண்டும் புதுபொழிவுடன்
ஞாயிற்றுக்கிழமை வாரம் ஒருமுறை
இப்போது சிவகங்கை சிவன் கோவில் அருகில்
நிரஞ்சன் தோல் கிளினிக்

என்றென்றும் மருத்துவ சேவையில்
மக்களின் மருத்துவர்
Dr.அமலா ராஜமுருகன் MD.(DVL)
தோல்நோய் மற்றும் அழகியல்
சிகிச்சை நிபுணர், உதவி பேராசிரியர்,
மருத்துவ கல்லூரி

அளிக்கப்படும் சிகிச்சை விபரம்

தோல் சம்மந்தமான நோய்கள்
- தீராத நீண்ட நாள்பட்ட சொறி, சிரங்கு, புண், தோல் அரிப்பு, கரப்பான்.
- அனைத்து வகையான படர் தாமரை மற்றும் வெண்தேமல்.
- முகப்பருக்களுக்கு மற்றும் சோரியாசிஸ் நோய்க்கு சிறப்பான சிகிச்சை.
- சூரிய ஒளியினால் தோலில் உண்டாகும் வியாதிகள் (Photo damaged Skin).
- வெண்குஷ்டம் மற்றும் வெண்புள்ளி கண்டறிந்து சிறப்பான சிகிச்சை.
- சர்க்கரை வியாதி சம்பந்தமான தோல் வியாதிகள்.
- கால்களில் பித்த வெடிப்புகள் மற்றும் சத்து குறைபாடுகளால் ஏற்படும் தோல் நோய்கள்.
- கால் ஆணி, கால் சதை (Callosity) தடிப்பு உயர்தர சிகிச்சை.

அழகு சம்மந்தமான சிகிச்சைகள் விபரம்
- அனைத்து வகையான தழும்புகள் சரிசெய்தல் (முகப்பரு, வெட்டுக்காயம், ஆப்ரேசன் தழும்பு).
- கை மற்றும் கால்களில் உள்ள மரு மற்றும் ஆணி கால்களுக்கு ஐஸ் சிகிச்சை (Cryosurgery).
- ஆண், பெண் இருபாலருக்கும் முகத்தில் உள்ள மங்கு அகற்றுதல் (Chemical Peeling).
- முகம் மற்றும் உடம்பில் உள்ள மரு மற்றும் கரும்புள்ளிகளை அகற்றுதல் (Electro Surgery) .
- முகப்பரு தழும்பு, முடி வளர்ச்சி, நாள்பட்ட புண் ஆகியவற்றிக்கு சிகிச்சை (PRP) மூலம் நிவாரணம்.

தலைமுடி சம்மந்தமான நோய்கள்
- நீண்ட நாள்பட்ட பொடுகு, பேன் தொல்லை, தலைமுடி உதிர்தல், ஆண், பெண் இருபாலருக்கும் சிறப்பான சிகிச்சை.
- தலைமுடி வழுக்கை, ஆண், பெண் (Androgenic alopecia).
- பூச்சி வெட்டு (Alopecia areata) மற்றும் இளநரை (Premature Canities).
- தலையில் சோரியாசிஸ் போன்ற வியாதிகள்.

நகம் சம்மந்தமான நோய்கள்
- நகச்சொத்தை & நகம் உள்நோக்கி வளர்தல், பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளால் ஏற்படும் பல்வேறு நோய்கள்.
- அனைத்து வகையான பால்வினை சம்பத்தப்பட்ட நோய்கள்.

பார்வை நேரம்: ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(வாரம் ஒருமுறை)

அன்பையும் ஆதரவையும் என்றென்றும் நாடும்
நிரஞ்சன் தோல் கிளினிக்
சிவன் கோவில் தெற்கு தெரு,
அழகப்பா பல்கலைக் கழகம், (மேல்மாடி) சிவகங்கை.
தொடர்பு அலைபேசி : 95853 36998



## கேட்ட வரங்களை தரும்

# ஜெய் ஸ்ரீ அகோரகாளி அம்மன் ஸ்ரீ அகோரவாராகி அம்மன்

## திருக்கோவில்



சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் இருந்து மதுரை ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலையில் இருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

கீழவெள்ளூர் பச்சை பசேல் என வயல் வெளிகளுடன் இயற்கை சூழல் நிறைந்த இடத்தில் உள்ளது பக்தர்கள் மனமுருகி கேட்ட வரங்களை தரும் ஸ்ரீ ஜெய் அகோரகாளிஅம்மன் ஸ்ரீ வாராஹி அம்மன் திருக்கோவில்.

இக்கோவிலில் பஞ்சமுகவிநாயகர், ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன், ஸ்ரீ பழனி ஆண்டவர், ஸ்ரீ நாகம்மாள் நாகராஜா, ஸ்ரீ வேட்டை மகாராஜா முனீஸ்வரர் மற்றும் ஸ்ரீல ஸ்ரீ மார்கண்டேய சித்தர் போன்ற சன்னதிகள் பிரம்மாண்டமாக உள்ளது.

இக்கோவில் ஸ்தல வரலாறு பற்றி கோவில் ஸ்தாபகர் காளி உபாசகர் ஸ்ரீ ஸ்ரீ மணிகண்டேஸ்வர சுவாமி கூறியதாவது

சிறுவயதில் இருந்தே காளி மீது தீவிர பக்தி கொண்ட நான் தியான



aanmeegamalar.com

aanmeegamalar.com



வழிபாடு செய்யும் போது அருள்வாக்கில் அழிந்த பிரபஞ்சத்தின் கீழ் நான் குடிகொண்டு உள்ளேன் எனக்கு கோவில் எழுப்ப வேண்டும் என எனது அருள் வாக்கில் கூறியபடி நான் கடந்த 2015 ஆண்டில் இங்கு ஏராளமான காளி பக்தர்களின் துணையோடு ஜெய் அகோர காளி அம்மன் அகோர வாராஹி அம்மன் கோவில் அமைத்து உள்ளேன்.

காளி அருள் வாக்கின் படி அமாவாசை சிறப்பு மகா யாகம் நடத்தப்பட்டு அன்னதானம் நடைபெற்று வருகிறது.ஆடிதிருவிழா விமர்சையாக நடைபெறும். பக்தர்கள் இக்கோவிலில் வந்து மனமுருகி வழிபாடு செய்வதால் கேட்ட வரம் கிடைக்கும்.

மஞ்சள் ஆடை அணிந்து வந்து வழிபாடு செய்தால் திருமணத்தடை மற்றும் சுபகாரியங்கள் நடைபெறும். பச்சை ஆடை அணிந்து வந்து வழிபாடு செய்தால் நினைத்த காரியங்கள் கைகூடும்.

செல்வம் பெருகி லட்சுமி கடாட்சம் கிட்டும். சிவப்பு ஆடை அணிந்து வந்து வழிபாடு செய்தால் பில்லி சூன்யம் ஏவல் எதிரிகள் தொல்லைகள் தீராத வியாதி நீங்கி மன நிம்மதி கிடைக்கும்.

ஜெய் ஸ்ரீ அகோர காளியை மாதம் தோறும் வரும் அமாவாசை தினத்தில் நடைபெறும் மகா யாகத்தில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்வில் நிம்மதி அடைய வேண்டும் என கூறினார்.






ஸ்ரீ அகோர காளி அம்மன்
ஸ்ரீ அகோர வராஹி
அம்மன் திருக்கோவில்
கீழவெள்ளுர் திருப்புவனம்
வழி சிவகங்கை மாவட்டம்



ஆன்மிக அன்பர்களுக்கு வணக்கம், பில்லி, சூன்யம், ஏவல் போன்றவற்றில் விடுபட வாழ்வில் அனைத்து சுப பலன்களை பெற்று நிம்மதி அடைய, தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, எதிரிகளல் தொல்லை நீங்க,



வாழ்வில் ஒருமுறை ஸ்ரீ அகோர காளி அம்மன், ஸ்ரீ அகோர வராஹி அம்மனை பச்சை மஞ்சள் சிவப்பு ஆடை அணிந்து மனமுருகி வழிபட்டு பிரதி மாதம் திருக்கோவிலில் நடைபெறும் அமாவாசை மகா யாகத்தில் பங்கு பெற்று பலன் அடையுங்கள்.

ஸ்ரீ அகோர காளி உபாசகர் அருள்வாக்கு சித்தர்
ஸ்ரீ ஸ்ரீமணிகண்டேஸ்வர ஸ்வாமி சக்திபீடம்,
கீழவெள்ளுர், ஆலய தொடர்புக்கு 9047829016

# மதுரையில் 18சித்தர்கள் கோவில்







கோவில் மாநகரம் என அழைக்கப்படும் மதுரையில் ஆயிரக்கணக்கான பிரசித்தி பெற்ற கோவில்கள் உள்ளது.

மீனாட்சி பட்டணம் என அழைக்கப் படும் மதுரையில் 18 சித்தர்களுக்கு தனி கோவில் உள்ளது.

மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள கீழடியில் 18 சித்தர் கள் கோவில் உள்ளது. இக் கோவில் சிறப்பு பற்றி கோவிலில் உள்ள சிவனடி யார்ஞானபிரகாசம் சுவாமி கூறியதாவது

18 சித்தர்கள் திருக்கோயில் அமைந் துள்ள இந்த ஊர் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள வாணிப நகரமான பழைய மதுரையாகும் முன்னால் குந்திதேவி சதுர்வேத மங்கலம் என்றும் பின்பு கீழடி என்றழைக்கப்படுகிறது.




இவ்வூரில் இக்கோவில் அமைய குந்திதேவி மற்றும் பஞ் சபாண்டவர்களும் எண்ணிலடங்கா சித்தர்களும் வாழ்ந்தும் வந்தும் சென்றுள்ளார்கள்.

இக்கோவிலின் மூலவர் அகத்தியர் மற்றும் நடராஜர் 6வது சபையாக காட்சியளிக்கிறார். அகத்தியசபை எனவும் பக்தர்கள் கூறி வழிபாடு செய்கின்றனர்.

ஊரின் பூராண பெயர்கள்

பெருமணலூர், குந்திதேவி சதுர் வேதமங்கலம், கிரீடபுரம், கீழடி எனவும் இப்போது அழைக்கபடுகிறது.

தல விருட்சம் மருதம் மரம் உள்ளது.

சிறப்பு: உலகத்தில் 18சித்தர்களுக்கும் தனித்தனி கருவறையாக ஒரே இடத்தில் சித்தர்களுக்கென்று தனிக்கோவிலாக அமைய பெற்றது சிறப்பாகும். இங்கு பக்தர்களே 18 சித்தர்களுக்கு பூஜை செய்து வழிபாடு செய்யலாம்.

கோவில் கோபுரத்தில் அனைத்து மகான்கள் சிலைகள் சுதை வடிவில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சித்தர்களின் மாதந்தோறும் ஜென்ம நட்சதிர வழிபாடு பூஜை ஆண்டு தோறும் குருபூஜை நடைபெறுகிறது.

இக்கோவிலில் தண்ணீரில் மிதக்கும் அதிசய கல் இப்போது உள்ளது.

18 சித்தர்கள் கோவில் அருகே பஞ்ச பாண்டவர்கள் வழி பாடு செய்த அர்சணேஸ்வரேர் சிவன் கோவில் உள்ளது. அங்கு பக்தர்கள் வழிபாடு செய்யலாம். 18 சித்தர்கள் கோவில் கீழடி அருங்காட்சியகம் செல்லும் வழியில் உள்ளது.

ஆலய தொடர்புக்கு 9842179533




அகத்தியா
பஞ்சகவ்ய விளக்கு

ஒரு கோமாதாவின் மூலம்
கிடைக்கப்படும் மூலப்பொருட்களைக்
கொண்டு தயாரிக்கப்படுகிறது
(100 இயற்கையானது,
வேதி பொருட்கள் கலக்காதது)



பஞ்சகவ்ய - பஞ்சபூத சக்தி
சாணம் - நிலம்
கோமியம் - நீர்
தயிர் - காற்று
பால் - ஆகாயம்
நெய் - நெருப்பு

பஞ்சகவ்ய விளக்கு
மூலிகை நெய் விளக்கு
மூலிகை வாசனை தூபம்
அக்னிஹோத்திர வில்லை
இறைவன் வடிவில் விதைப்பந்து

பஞ்சகவ்யம் பஞ்சபூதங்களை
சமநிலைப்படுத்தும்



ஒரு மண்டலம்
(48 நாட்கள்)
இவ்விளக்கை
ஏற்றினால்
நினைத்தவை நடக்கும்.

தொடர்புக்கு: 18 சித்தர்கள் திருக்கோயில் கீழடி
செல்: 9842179533

# 27 நட்சத்திரக்காரர்கள் வணங்க வேண்டிய சித்தர்கள்

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு சித்தர்கள் இருக்கின்றனர். அந்தந்த நட்சத்திரக்காரர்கள் தங்களுக் குரிய சித்தரை மனதார வணங்கி பிரார்த்தனை செய்தால் கட்டாயம் அந்த சித்தர்கள் கேட்ட வரங்களை கண்டிப்பாக வாரி வழங்குவார்.

அதன்படி, 27 நட்சத்திரக்காரர்கள் எந்தெந்த சித்தரை வணங்கலாம். மேலும், அந்த சித்தர்கள் எங்கு குடிகொண்டு உள்ளனர் என்பதை இங்கு விரிவாக காண்போம்.

★ **அஸ்வினி** காலங்கி நாதர் சித்தர் இவரது சமாதி மற்றும் சக்தி அலைகள் கஞ்சமலை மற்றும் திருக்கடையூர் ஆகிய கோவில்களில் உள்ளது.

★ **பரணி** போகர் சித்தர் இவருக்கு பழனி முருகன் கோவிலில் தனி சமாதி உள்ளது.

★ **கார்த்திகை** ரோமரிஷி சித்தர் இவருக்கு ஜீவசமாதி இல்லை. (காற்றோடு காற்றாக கலந்து விட்டார் என கூறப்படுகிறது).

★ **ரோகிணி** மச்சமுனி சித்தர் இவர் ஜீவசமாதி திருப் பரங்குன்றத்தில் உள்ளது.

★ **மிருகசீரிடம்** பாம்பாட்டி சித்தர் மற்றும் சட்டமுனி சித்தர். பாம்பாட்டி சித்தரின் ஜீவசமாதி சங்கரன்கோவிலில் உள்ளது. சட்டமுனி சித்தரின் ஜீவசமாதி ஸ்ரீரங்கத்தில் உள்ளது.

★ **திருவாதிரை** இடைக்காடர் இவரது ஜீவசமாதி திரு வண்ணாமலையில் உள்ளது.

★ **புனர்பூசம்** தன்வந்தரி சித்தர் இவர் வைத்தீஸ்வரன் கோவிலில் ஜீவசமாதி ஆனவர்.

★ **பூசம்** கமலமுனி சித்தர் இவர் ஜீவசமாதி திருவாரூரில் உள்ளது.

★ **ஆயில்யம்** அகத்தியர் சித்தர் இவரது ஒளிவட்டம் குற் றாலம் பொதிகை மலையில் உள்ளது.

★ **மகம்** சிவ வாக்கிய சித்தர் இவரது ஜீவசமாதி கும்ப கோணத்தில் உள்ளது.

★ **பூரம்** ராமதேவ சித்தர் இவரது ஜீவசமாதி அரபு நாடான மெக்காவில் உள்ளது. இவர் ஒளி வந்து போகும் இடம் அழகர்மலை.

★ **உத்திரம்** காகபுஜண்டர் இவர் ஜீவசமாதி அடைந்த இடம் திருச்சி உறையூரில் உள்ளது.

★ **ஹஸ்தம்** கருவூரார் சித்தர் இவரது சமாதி கரூரில் உள்ளது. இவரது ஒளிவட்டம் வந்து செல்லும் இடம் தஞ்சாவூர் பெரிய கோவில் ஆகும்.

★ **சித்திரை** புண்ணாக்கீசர் சித்தர் நண்ணாசேர் என்ற இடத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

★ **சுவாதி** புலிப்பாணி சித்தர் இவரது சமாதி பழனிக்கு அருகில் உள்ள வைகாவூர் என்ற இடத்தில் உள்ளது.

★ **விசாகம்** நந்தீசர் சித்தர் மற்றும் குதம்பை சித்தர் நந்தீசர் காசி நகரத்திலும் (பனாரஸ்), குதம்பை சித்தர் மாயவரத்திலும் ஜீவசமாதி அடைந்துள்ளனர்.

★ **அனுஷம்** வால்மீகி சித்தர் இவருக்கு எட்டுக்குடியில் ஜீவசமாதி உள்ளது.

★ **கேட்டை** பகவான் வியாசருக்கு உரிய நட்சத்திரம் இவரை நினைத்தாலே போதும். அந்த இடம் வருவார்.

★ **மூலம்** பதஞ்சலி சித்தர் இவர் சமாதி ராமேஸ்வரத்தில் உள்ளது.

★ **பூராடம்** ராமேதவர் சித்தர் இவரது ஜீவ ஒளியை அழகர்மலையில் தரிசிக்கலாம்.

★ **உத்திராடம்** சித்தபிரான் கொங்கணர் இவர் ஜீவசமாதி அமைந்துள்ள இடம் திருப்பதி ஆகும்.

★ **திருவோணம்** தட்சிணாமூர்த்தி சித்தர் இவர் சமாதி புதுச்சேரி அடுத்து உள்ள பள்ளித்தென்னல் என்ற இடத்தில் உள்ளது.

★ **அவிட்டம்** திருமூலர் சித்தர் இவர் சிதம்பரத்தில் ஜீவசமாதி அடைந்தார்.

★ **சதயம்** கவுபாலர் சித்தர் இவரை நினைத்தாலே தேடிவந்து அருள்புரிவார்.

★ **பூரட்டாதி** ஜோதிமுனி சித்தர் இவர் ஜோதி வடிவிலே ஜீவனாக உள்ளவர். அதனால் இவருக்கு தீபம் ஏற்றி வழிபட்டால் அங்கு அருள்பாலிப்பார்.

★ **உத்திரட்டாதி** டமரகர் சித்தர் இவரும் நேரிடையாக காற்றில் ஐக்கியமாகி கலந்துவிட்டார் என்று வரலாறு கூறுகிறது. இவரை வீட்டிலேயே சிறு மணி ஓசையில் வரவழைத்து வணங்கலாம்.


★ **ரேவதி** சுந்தரானந்தர் சித்தர் இவரது ஜீவசமாதி கோவில் மதுரையில் உள்ளது.

எனவே, 27 நட்சத்திரக்காரர்களும் அவரவர்களுக்குரிய ஜீவசமாதி இடங்களுக்கு சென்று வணங்கினால் சித்தர்களின் அருளை முழுமையாக பெற்றலாம்.


D.தனபாலன்
பத்திர எழுத்தர்

பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில்,
மானாமதுரை 630 606
செல்: 98424 09829

# மதுரையில் சித்தர்களின் ஜீவசமாதிகள்







**நிஜானந்த சுவாமிகள்:** மதுரை ராஜபாளையம் சாலையில் 40.கீ.மீ தூரத்தில் இருக்கும் டி,கல்லுப்பட்டியில் இறங்கி பேரையூரை அடைந்தால் அங்கு இவரது ஜீவசமாதிஉள்ளது.

**சுந்திர சுவாமிகள்:** டி.கல்லுப்பட்டி, பேரையூரில் இருந்து கூவலப்புரம் ( மதுரை மாவட்டம் )வந்தால் இவரது ஜீவசமாதி உள்ளது.

**சங்கரானந்த சுவாமிகள்:** டி.கல்லுப்பட்டி விருதுநகர் சாலையில் அரசுப் பேருந்து ஏறி வி.ரெட்டிப்பட்டியில் இறங்கினால் அக்கிராமத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**வெள்ளையா சுவாமிகள், கருணானந்த சுவாமிகள்:** மதுரை வடக்கு வெளி வீதியில் (315/94 கதவு இலக்கம் உள்ள) சிம்மக்கல் பஸ் ஸ்டாப்பில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**பழனி நாச்சிமுத்து சுவாமிகள், சிவாநாராயண தேசிகர்:** மதுரை ஆரப்பாளையம் பஸ் நிலைத்திற்கு அருகில் உள்ள புட்டுத் தோப்பு சிவன் கோயில் எதிர்புறத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**சாது விவேகானந்த முனீஸ்வரா்:** இவரது ஜீவசமாதி மதுரை குரு தியேட்டர் எதிரிலுள்ள மேட்டுத் தெரு கடைசியில் உள்ளது. இவரது ஜீவசமாதி இருக்குமிடத்தில் சீமைச் சுவாமி யோகி, பாலயோகி கணேஷ்பாபு ஆகியோரின் ஜீவ சமாதிகளும் உள்ளது.

**குழந்தை சுவாமிகள்:** மதுரை பெரியார் பஸ் நிலையத்திற்கு கிழக்கில் நேதாஜி ரோடில் உச்சினி மாகாளி அம்மன் கோயில் எதிரில் உள்ள ஏழூர் சாலியர் சத்திரத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**தலைவிரிச்சான் சுவாமிகள்:** மதுரை தங்கம் தியேட்டர் அருகில் (காக்கா தோப்பு) தலைவிரிச்சான் சந்தில் இவரது ஜீவ சமாதி உள்ளது.

**குட்டைய சுவாமிகள்:** மதுரை தெற்கு வெளி வீதியில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**விவேகானந்த சரஸ்வதி சுவாமிகள்:** மதுரை ஆண்டாள்புரம் மேம்பாலத்திற்கு அதாவது பெரியார் பஸ் நிலையத்திற்குத் தெற்கே பாலத்தின் கீழ் உள்ள மடத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**சிவானந்த சுவாமிகள்:** விவேகானந்த சுவாமிகள் ஜீவசமாதி இருக்கும் மடத்தை ஒட்டி இவரது ஜீவசமாதி உள்ளது.

**மூக்கன் சுவாமிகள்:** மதுரை திருப்பரங்குன்றம் சாலையில் தியாகராசர் கல்லூரி வளாகத்தின் கடைசியில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**பிரமானந்த சுவாமிகள்:** மதுரை, அவனியாபுரம் மேம்பாலத்திற்குக் கீழ் இவரது ஜீவசமாதி உள்ளது.

**ஓம் சிவப்பிரகாசர் சுவாமிகள்:** மதுரை திருப்பரங்குன்றம் சாலையில் தியாகராசர் கல்லூரிக்குச் செல்லும் பாதையின் ஆரம்பத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**பழனி மூட்டை சுவாமிகள்:** தியாகராசர் கல்லூரியை அடுத்து இருக்கும் காவல் நிலையத்தைக் கடந்து மாயாண்டி சுவாமிகள் சமாதிக் கோயிலுக்குச் செல்லும் வழியில் இவரது ஜீவ சமாதி உள்ளது.

**நடன கோபால நாயகி சுவாமிகள்:** மதுரை அழகர்கோயில் சாலையில் காதகிணறு என்னும் கிராமத்தில் ஜீவசமாதி ஆனார்.

**கத்திரிக்காய் சித்தர்:** மதுரையிலிருந்து 19.கி,மீ தூரத்திலுள்ள திருப்புவனத்தில் அரசு மருத்துவமனை எதிர் சாலையின் மேல் இவரது ஜீவசமாதி உள்ளது.

**அருளானந்த சித்தர்:** மதுரையிலிருந்து 25.கி,மீ,தூரமுள்ள சோழவந்தானின் ஜனகை மாரியம்மன் கோயில் பின்புறமுள்ள ஜின்னி மடத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**ஞானதேசிகர்:** சோழவந்தான் ஜின்னி மடத்திற்கு அருகில் உள்ள ஞானியார் மடத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**முனியாண்டி சுவாமிகள்:** மதுரை ராஜபாளையம் சாலையில் 28கி.மீ. தொலைவில் உள்ள டி,குன்னத்தூர் சென்று அங்கிருந்து அரை கி,மீ,தூரமுள்ள கே,ரங்கபாளையம் சென்றால்

aanmeegamalar.com

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.

இவரது ஜீவசமாதி உள்ளது.

**கமலானந்தர்:** கே.ரங்கபாளையத்தில் வடக்குவாய் செல்லி யம்மன் கோயில் அருகில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**மௌனகுரு சுவாமிகள்:** தேனியிலி ருந்து 15.கி.மீ. தொலைவிலுள்ள பெரியகுளத்தில் வராகநதி பாலத்தி லிருந்து அருள் தியேட்டர் செல்லும் வழியில் இவரது ஜீவசமாதி உள்ளது.



**பாட்டையா சுவாமிகள், கருணையானந்த சுவாமிகள்:** மதுரை ஸ்ரீ வில்லிபுத்தூர் சாலையில் டி,கல்லுப்பட்டியி ல் இறங்கி அங்கிருந்து 7.கி,மீ தூரத்தில் உள்ள பேரையூர் வந்து பேரையூரிலிருந்து 2.கி,மீ தொலைவிலுள்ள சாளசந்தை கிராமம் சென்றால் இவரது ஜீவசமாதி உள்ளது.

**சடையாண்டி ரெட்டியார் சுவாமி கள்:** உசிலம்பட்டியிலிருந்து 36.கி.மீ.தூரத் தில் சாப்டூர் சென்று அங்கிருந்து 4 கி.மீ.வண்டல்பட்டி ஸ்டாப்பில் இறங்கி சிறிது தூரம் சென்றால் விட்டல்பட்டி கிராமத்தில் தெப்பஊரணி அருகில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**தேசிக ஆனந்த சுவாமிகள்:** மதுரையிலிருந்து உசிலம்பட்டி வந்து அங்கிருந்து ஏழுமலை செல்லும் சாலையிலுள்ள கோட்டைப்பட்டியில் இவரது ஜீவசமாதி உள்ளது, இவரது பிரதான சீடர் குருநாத சுவாமியின் உடல் இவரது ஜீவ சமாதிக்கு நேர் உள்ளது.

**குழந்தையானந்த சுவாமிகள்:** இவரது ஜீவசமாதி நான்கு இடங்களில் உள்ளது, முதன் முதலாக ஜீவசமாதி கொண்டது காசித் தலத்தில் இவருடைய ஜீவசமாதி இவருடைய குருநாதர் ஸ்ரீ கணபதி பாபவின் ஜீவசமாதிக்கு அருகில் உள்ளது.



இரண்டாவது, நேபாளத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ பசுபதிநாதர் ஆலயத்தில் உள்ளது.

மூன்றாவது, தமிழகத்தில் தென்காசிக்கு வந்து சன்னதி மடம் தெருவில் உள்ள சங்கரன் பிள்ளை என்பவரது வீட்டிற்குள் ஜீவசமாதி அடைந்தார், இது நெல்லையப்பர் சமாதி என்று அழைக்கப்படுகிறது.

நான்காவது, மதுரை அரசடிப் பகுதியில் காளவாசல் பஸ் ஸ்டாப்புக்கு அருகில் உள்ளது.

**நாகநாத சுவாமிகள்:** மதுரை மேலூரிலிருந்துஏரியூர் செல்லும் பாதையில் உள்ள வடவன்பட்டியில் கிழக்கு எல்லையில் சாலைக்கு வடபுறமுள்ள ஊராட்சி மன்றக் கட்டடத்திற்கு நேர் எதிரில் தெற்கே இவரது ஜீவசமாதி உள்ளது.

**இடைக்காடர்:** இடைக்காட்டூர் மணிகண்டீஸ்வரர் கோயிலில் இவரது ஜீவசமாதி உள்ளது, மதுரை (மாட்டுத்தாவணி) அல்லது மானாமதுரையிலிருந்து இங்கு வரலாம்.

**சத்குரு:** உசிலம்பட்டி தேனி சாலையில் ஆண்டிப்பட்டியை அடுத்த எம்,சுப்பலாபுரம் என்னும் இடத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**சிங்கம்புணரி வாத்தியார் சுவாமிகள், முத்துவடுக நாத சுவாமி கள்:** சிங்கம்புணரி பஸ் நிலையத்தின் அருகில் இவரது உள் ளது.

**தங்கவேல் சுவாமிகள், சுப்பையா சுவாமிகள்:** மதுரை ஆரப்பாளையம் பஸ் நிலையத்திற்கு மேற்கே சிறிது தொலைவில் உள்ள வைகை நகர் அருகில் நெ.10.ஆரப்பாளையம் மெ யின் ரோடு இந்த ஜீவசமாதிகள் இருக்கும் இடமாகும்.

**மாதவ ஆனந்த சுவாமிகள்:** இவரது ஜீவசமாதி, 80. டி.மீனாட்சி இல்லம்,நேர் நகர், அழகப்பா நகர், மதுரை 3. அழகப்பா நகர் ரயில்வே கேட் பஸ் ஸ்டாப்பில் இறங்கி அரை கி,மீ,தூரம் நடந்தால் இவரது ஜீவசமாதி உள்ளது.

**ரமணகிரி சுவாமிகள்:** மதுரையை அடுத்த வாடிப்பட்டியிலிருந்து 7.கி,மீ. தொலைவிலுள்ள குட்லாம்பட்டியில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**சுந்தரானந்த சுவாமிகள்:** மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலேயே ஜீவசமாதி அடைந் திருக்கிறார்.

**மாயாண்டி சுவாமிகள்:** மதுரை திருப்பரங்குன்றம் சாலையில் தியாகராசர் இன்ஜினியரிங் காலேஜ் ஸ்டாப்பில் இறங்கி மலையடிவாரம் சென்றால்,இவரது ஜீவசமாதி உள்ளது.

**சோமப்ப சுவாமிகள்:** மாயாண்டி சுவாமிகள் ஜீவசமாதி இருக்கும் இடத்திலிருந்து மலை மீது இருக்கும் முருகன் கோயிலுக்குச் செல்லும் வழியில் இவரது ஜீவசமாதி உள்ளது.

**மச்சமுனி:** இவரது ஜீவசமாதி திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் உள்ளது.




உ

ஸத்குருநாதர் அருள்



இப்பூவுலகில் அவதாரம் செய்த மகான்களில் மிகவும் குறிப்பிடத்தக்க அவதாரமாக ஸ்ரீலஸ்ரீ குழந்தையானந்தனார் அவதாரம் செய்தார். உலக மக்கள் நலமுடன் வாழ அவதரித்த மகான் பல அற்புதங்கள் நிகழ்த்தி, இறந்த அரச குமாரனை பிழைக்க வைத்து ராஜாவினால் மகரகண்டி மாலை அணிவித்து ராஜாக்கள் பூஜை செய்தனர். ராஜா பூஜித்ததால் "ராஜா பூஜித" என்ற கீர்த்தி அடைந்தார்.

மதுரையிலும், அருகிலுள்ள ஊர்களிலும் பக்தர்கள் பலருக்கு அருள்புரிந்தார் தீராத பிணிகளைத் தீர்த்தும், குழந்தை இல்லாதவர்களுக்குக் குழந்தை வரம் தந்தும், வேண்டியவற்றை அருளியும், பக்தர்களை ஆபத்துகளிலிருந்து காத்தும், தன்னை நாடி வந்து சரண் அடைந்தவர்களுக்கு அனுக்ரஹம் புரிந்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஸத்குரு குழந்தையானந்தர் குரு பூஜை வருகின்ற 12.10.2024ம் தேதி 92ஆம் ஆண்டு ஆராதனை (குருபூஜை) வெகு சிறப்பாக நடைபெறும். மதுரை, வத்தலக்குண்டு ஆதிஷ்டானத்தில் அன்னதானம், வஸ்த்திரதானம் நடைபெறுகிறது.



அனைவரும் வருக..! குரு அருள் பெறுக..!


இன்பம் சூழ்க..!

அன்புடன் சத்குரு தாசன்

இரா. முத்துச்செல்வம்

போன்: 9790355092

# மேன்மைதரும் மேற்கு நோக்கிய விநாயகர்



நம் வாழ்வில் மேன்மை களை தரும் மேற்கு நோக்கி பக்தர்களுக்கு அருள் பாலிக் கும் சித்தி புத்தி விநாயகர் கோவில் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வைகை ஆற்றின் கீழ்கரையில் அமைந்து உள்ளது. கங்கை போல் வடக்கு தெற்காக பாயும் மானாமதுரை வைகை ஆற்று கரையில் மேற்கு திசை நோக்கி சித்தி புத்தி விநாயகர் கோவில் மட்டுமே உள்ளது.

பல ஆண்டு காலம் அரச மரத்தை தல விருட்சமாக கொண்ட இக்கோவிலில் சங்கடஹர சதுர்த்தி, வருஷாபிஷேகம், விநாயகர் சதுர்த்தி நாட்களில் பல வகை அபிஷேகங்களுடன்

சிறப்புபூஜை நடைபெறுகிறது. மானாமதுரை பகுதியில் உள்ளவர்கள் வீட்டு விசேஷ பத்திரிகைகளை இங்கு இங்கு வந்து வைத்து மேற்கு நோக்கி

காணப்படும் சித்தி புத்தி விநாயகரை வணங்கிய பின் தங்கள் வீட்டு விஷேச பணிகளை செய்து வருகின்றனர்.

புத்திரபாக்கியம், திருமண தடை விலகுவதாகவும், நவக்கிரக தோஷகிரக பாதிப்பு நீங்குவதாகவும் பக்தர்களால் நம்பப்படுகிறது.

தூய பசும்பால் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. புதுப்பிக்கப்பட்டு கும்பாபி ஷேகம் கண்ட சித்தி புத்தி விநாயகர் கோவிலில் நாகர், நவக்கிரக சன்னதி உள்ளது.

வெளியூர் செல்லும் பக்தர்கள் தினமும் ஏராளமானோர் காலை, மதியம் அரசமரத்தை சுற்றி வலம் வந்து சித்தி புத்தி விநாயகரை தரிசித்து செல்கின்றனர்.




## கணபதி ஹோமத்தின் சிறப்பு



எந்தத் தொழில் தொடங்கினாலும் கணபதி ஹோமம் செய்தபிறகு துவக்குவது மிகச்சிறந்த பலனைத்தரும். வீடுகளில் கிரகப்பிரவேசம் நடத்தும்போது கணபதி ஹோமம் நடத்தி, புதுவீடு புகுவது எக்காலமும் நன்மை தரும். குடும்பத்தில் தொடர்ந்து சுகவீனம் ஏற்பட்டால் கணபதி ஹோமம் நடத்தி உடல்நிலை நன்றாகப் பெறலாம். ஒரு கடிதம் எழுதும்போதும் கூட பிள்ளையார்சுழியுடன் துவங்குவது மரபு. விநாயகரே முழு முதற்கடவுள். கணபதி ஹோமத்தை விநாயகர் வேள்வி என்றும் சொல்வதுண்டு. விநாயகரை வணங்கி, விநாயகர் குறித்த மந்திரங்கள் ஓதி, அவரை புகழ்ந்து பக்திப்பாடல்களை மனமுருகிப் பாடி கணபதி ஹோமத்தை நிறைவேற்ற வேண்டும். நம் வீடுகளில் நடக்கும் காதணி விழா, பிறந்தநாள், திருமண நிகழ்ச்சி, தொழிற்சாலைகளில் நடக்கும் பவள விழா, முத்துவிழா ஆகிய நிகழ்ச்சிகளிலும் கணபதி ஹோமம் செய்ய வேண்டும். புதிய எந்திரங்கள் வாங்கினால் அவை பழுதின்றி இயங்க விநாயகர் வேள்வி அவசியம். நல்ல காரியங்களில் மட்டுமின்றி மறைந்த நம் முன்னோரை நினைவுபடுத்தும் நாட்களான தை அமாவாசை, ஆடி அமாவாசை ஆகிய நாட்களிலும் கணபதி ஹோமம் செய் வது மிகச்சிறந்த பலனைத்தரும். நமது சக்திக்கு ஏற்றபடி செலவு செய்து இந்த பூஜையை நடத்தலாம்.

# குருவாக அருள்பாலிக்கும் திருச்செந்தூர் முருகன்

அஞ்ஞானத்தில் இருப்பவர்களுக்கு நிரந்தர உண்மையை போதித்து மெய்ஞ் ஞான பாதைக்கு வழிகாட்டுபவர் தான் "குரு". தந்தைக்கு ஞானத்தை போதித்து "சிவகுருநாதன்" என்று பெயர் பெற்ற முருகப்பெருமானும், ஒரு மனிதனுக்கு மெய்ஞ்ஞானத்தையும், இன்ன பிற நன்மைகளையும் அளிக்கும் நவகிரகங் களில் ஒருவராகிய "குருபகவான்" ஒரே அம்சமாக இருக்கும் ஸ்தலமே "திருச் செந்தூர்" கோவில்.



"சூரபத்மன்" எனும் அரக்கனை அழிப்பதற்காக சிவ பெருமானால் தோற்று விக்கப்பட்டவர் "செந்திலாண்டவராகிய" முருகபெருமான். சூரபத்மனையும்,அவனது அராஜக ஆட்சியையும் அகற்ற அவனுடன் போர்புரிய தொடங்கினார் முருகன். இப்போரில் முருகப்பெருமானுக்கு பல ஆலோச னைகளை வழங்கியவர் "தேவர்களின் குருவான" "குரு பகவான்".

போரின் இறுதியில் சூரபத்மனை வதம் புரிந்த முருகன், இப்போரில் தன்னுடைய வெற்றிக்கு சிறந்த ஆலோசனை களை வழங்கிய குரு பகவானை கவுரவிக்கும் விதமாக, இந்த திருச்செந்தூர் கோவிலில் வீற்றிருக்கும் தனக்கு நிகரான வழிபாட்டு மரியாதை குரு பகவானுக்கும் தரப்படும் என அருள்புரிந்தார். எனவே இத்தல முருகனே குரு பகவானாக கருதி வழிபடப்படுகிறார்.

ஜோதிடத்தில் குரு பகவான் மட்டுமே முழு சுபகிரகம். ஜாதகத்தில் குருவின் கோட்சாரம் சரியில்லாதவர்கள், குரு கிரக பெயர்ச்சியால் பாதகமான பலன்களை பெறுபவர்கள், இந்த திருச்செந்தூர் கோவில் கடற்கரையில் வியாழக் கிழமையன்று காலையில் நீராடி, பின்பு அங்கிருக்கிருக்கும் நாழி கிணற்று தீர்த்த நீரிலும் நீராடி, கோவிலுக்குச் சென்று செந்திலாண்டவருக்கு அர்ச்சனை செய்து கோவிலை 9 முறை வலம் வந்து வழிபட வேண்டும். இவ்வாறு வழிபட்டால் குரு பகவானால் நன்மைகள் ஏற்படும். குரு கிரக பெயர்ச்சியால் கெடுதலான பலன் ஏற்பட இருந்தவர்களுக்கும் அந்த பாதிப்பு ஏற்படாமல் காக்கும். ஒருவர் எத்துறை சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்தாலும், அதில் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். நீண்ட நாட்களாக குழந்தைகள் இல்லாமல் தவித்தவர்களுக்கு குழந்தைகள் பிறக்கும். பொன் ஆபரணங்களின் சேர்க்கையும் ஏற்படும்.

இராமநாதபுரம் அரண்மனையில் உங்கள்
வாசுதேவன் பர்னிச்சர் &
ஹோம் அப்ளையன்ஸ்
Prop: S.முனீஸ்வரி


எங்களிடம் உங்கள் வீட்டுக்கு தேவையான
பிரிட்ஜ், வாஷிங் மெஷின், மின் விசிறி உள்ளிட்ட பல்வேறு மின்சாரப் பொருட்களும், திருமண சீர்வரிசை, கட்டில், மெத்தை, தலையணை, நவீன சேர்கள், இன்னும் பலவிதமான, புதுவிதமான பொருள்களும் ஒரே இடத்தில் வாங்கி மகிழுங்கள்...
வாசுதேவன் பர்னிச்சர் ஹோம் அப்ளையன்ஸ்
30/51, வள்ளல் பாண்டித்துறை வணிக வளாகம், இராமநாதபுரம்
7598268209 / 8778458626



aanmeegamalar.com

# எழில்மிகு ஏழு நிலை கோபுரத்துடன் காட்சியளிக்கும் தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலை விலும், காளை யார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலை விலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலை விலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப் பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.


இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத் திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங்கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அற நிலை யத் துறையின் கட்டுப்பாட்டில் இத்திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், ‘தாய்மங்கலம்’ என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக் கிறாள், ஸ்ரீமுத்து மாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியைச் சேர்ந்த வணிகர்கள் தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். இந்த கிராமத்தைச் சேர்ந்த முத்துச் செட்டியார், இவர் மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர்.



மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும்போதெல்லாம் மீனாட்சியையும், சொக்கநாதரையும் தவறாமல் வழிபட்டு வருபவர், அப்படி ஒரு நாள் மீனாட்சியம்மனிடம், தனக்கு குழந்தை இல்லாததை எண்ணி மனமுருகி வேண்டி மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரிய வில்லை என்றும் கூறி தேம்பினாள்.

"கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கின்றேன்" எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந் தையை தனக்குத் தந்ததாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

செல்லும் வழியில் அங்குள்ள குளத்தின் அருகில். பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு குளத்தில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன முத்துச் செட்டியார் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப் போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமையிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான்உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்துஎழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடை வில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக் கப்பட்ட வர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற் றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும் என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை





பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த்திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காணலாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங்களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது. கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக்கின்றனர்.

கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங்கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

தற்போது இத்தலத்தில் திருப்பணி வேலைகள் முடிவடைந்து கடந்த ஆகஸ்ட் மாதம் 22ம் தேதி மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 48ம் நாள் மண்டல பூஜைகள் வரும் அக்டோபர் 8ந் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. மண்டல பூஜைகளை பிள்ளையார் பட்டி சிவதிரு பிச்சை குருக்கள் ஸ்வாமி செய்கிறார்.

மண்டல பூஜையைத் தொடர்ந்து தற்போது நவராத்திரி விழாவும் நடைபெற்று வருகிறது. விழா ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் வெங்கடேசன் செட்டியார் மற்றும் விழாக் குழுவினர் செய்துவருகின்றனர்.






aanmeegamalar.com

# குழந்தையாக வந்து பக்தர்களின் குறைகளை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரியம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங் குடி வட்டாரத்தில் அமைந் துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவில் உள்ள தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் இத்திருக் கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார்.



இத்தலத்து அம்மன் குழந்தை வடிவில் தோன்றி அன்னை மீனாட்சியாகவே நின்றகோலத்தில் பக்தர்களுக்கு காட்சிதருகிறார்.

ஆண்டு தோறும்தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெற கிறது.

இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி தீர்த்தகுளமாககருதபடுகிறது.

இங்கு வருபவர்கள் முதலில் குளத்தில் நீராடி பின் தீசட்டி, அங்கபிரதட்சனம், பால்குடம், கரும்பு தொட்டில் எடுத்து நேர்த்தி கடன்செலுத்துவார்கள்.

ஆண்டு தோறும் பொங்கல் விழாவின்போதுமட்டும் இரண்டு நாட்கள் பக்தர்கள் 24 மணிநேரமும் தரிசனம்செய்யலாம்.

தற்போது நவராத்திரி விழா விமரிசையாக நடைபெற்று வருகிறது, தற்போது திருப்பணிகள் முடிந்து ஏழுநிலை ராஜகோபுரம் அமைக்கப்பட்டு, தற்போது ஏராளமான பக்தர்கள் நவராத்திரி விழாவிலும் அதிக அளவில் பங்கேற்று வருகின்றனர்.









aanmeegamalar.com





# வேண்டுதல் நிறைவேற்றி தரும் நலம் தரும் சீரடி சாய்பாபா கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஆதனூர் சாலை யில் நலம் தரும் சீரடி சாய்பாபா திருக்கோவில் உள்ளது.

தற்போது இங்கு நடைபெறும் பிராத்தனை வழிபாட்டில் தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வழிபாடு செய்து வேண்டுதல்களை பாபா விடம் தெரிவிக்கின்றனர்.

வியாழன் தோறும் ஆரத்தி சேவை நடைபெறுகிறது.

இதில் மானாமதுரை மற்றும் அதை சுற்றி உள்ள கிராமப்பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலில் பாபா தரிசனம் செய்கின்றனர். தற்போது நவராத்திரி விழா தொடங்கி நடைபெற்று வருகிறது.

வரும்12ந்தேதி விஜயதசமி தினத்தன்று 108 கலச பூஜை யும் சாய் பாபாவின் 106வது சமாதி தின ஆராதனை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இது மானாமதுரையில் சாய்பாபாவிற்காக அமைக்கப்பட்ட முதல் கோவிலாகும்.

மானாமதுரையில் உள்ள பாபா கல்வி அறக்கட்டளை சார்பில் கோவில் அமைக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. காய்ச்சல் மற்றும் உடல் நலம் குன்றியவர்கள் வழிபட்டும் குணமடைந்து வருவதால் நலம் தரும் சீரடி சாய்பாபாவை நாள் தோறும் வணங்கி செல்கின்றனர்.







# மதுரையில் பக்தரின் கனவில் காட்சியளித்த காஞ்சி மகா பெரியவா

காஞ்சியின் கருணைக்கடல் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா' நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அவரை ஆத்மார்த்த குருவாக ஏற்றுக் கொண்ட பக்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல நிகழ்ச்சிகளே அதற்குச் சான்று. காஞ்சியில் அருளும் ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா, மீனாட்சி அருளாட்சி செய்யும் மீனாட்சி பட்டணமான மதுரையில் குடி கொண்ட வரலாறும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.







மகா பெரியவாவின் தொண்டர்களில் ஒருவர் நெல்லை பாலு. காஞ்சிபுரத்தில் பத்திரிக்கையாளராக பணியாற்றி காஞ்சி மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை செய்து வந்தவர். மகா பெரியவரின் காலத்திற்கு பிறகு, குடும்ப சூழல் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தார். மகா பெரியவாவின் தீவிர பக்தரான இவருக்கு அடிக்கடி காஞ்சிபுரம் சென்று தரிசிக்க இயலவில்லையே என்ற மனக்குறை மட்டும் தீரவில்லை. எனவே, மதுரையில் அனுஷத்தின் அனுகிரகம் என்ற அமைப்பை தொடங்கி மகா பெரியவரின் பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், மதுரையிலேயே பொது இடத்தில் அவரது படங்களை வைத்து பூஜிப்பதை வழக்கமாக செய்து வந்தார். பெரியவா குறித்த சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்து வந்தார். இவ்வாறு, பூஜைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன. இதில் கலந்து கொண்ட பல பக்தர்களும் மதுரையில் பெரி யவருக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வந்தனர். அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்கள் தான் காஞ்சி பெரியவரின் அனுக்கிரகம்.

அது பற்றிப் பேசிய நெல்லை பாலு, "2012 ஆம் ஆண்டில், மகா பெரியவரின் வருடாந்திர ஜெயந்தி விழாவிற்கு சுமார் 2 வாரங்களுக்கு முன்பாக, கனவில் மகாபெரியவரின் விக்ரகம் ஒன்று தொடர்ச்சியாக வந்தது. அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காஞ்சி மடத்திற்கு சென்று விட்டேன். ஜெயேந்திரரிடம் கனவைப் பற்றியும் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியபடி ஒரு சிலையை பக்தர்கள் இதற்கு முன்பாக மடத்திற்கு கொடுத்துள்ளதாகவும் அப்போது அவர் தெரிவித்தார். பின்னர், மகாபெரியவரின் அதிஷ்டானத்தில் வழிபட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அப்போது, மடத்திற்கு வந்திருந்த சுமார் ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் என்னருகே வந்து, 'சிலை விஷயமாத்தானே புது பெரியவாவிடம் பேசுனீங்க!' எனக் கேட்க, ஒரு கணம் அதிர்ந்தே போய் விட்டடேன். நான் உள்ளே பேசியது வெளியில் இருந்த சிறுவனுக்கு எப்படித் தெரியும்? என வியப்பு எனக்கு! அதற்குமேல் பேசாத அந்தச் சிறுவன், ஒரு தொலைபேசி எண்ணை மட்டும் கொடுத்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து நடையைக் கட்டி விட்டான். அங்கு அந்தச் சிறுவனை தவிர வேறு யாரும் இல்லை. ஒருவேளை பெற்றோர்களுடன் வந்திருந்தாலும் கூட, அப்படி யாரும் அங்கு இருந்ததாகவும் தெரியவில்லை.

குழப்பத்தோடு, சிறுவன் கொடுத்த எண்ணை தொடர்பு கொள்ள, எதிர்முனையில் பேசியவர் கும்பகோணத்தில் இருந்த ஒரு சிற்பி. 'இது பெரியவாவின் அனுக்கிரகம்!' என்று அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். கனவில் கண்டபடி சிலை வடிக்க வேண்டும் என்று ஸ்தபதியிடம் கேட்க, அவ்வாறு சிலை வடிக்க தாமதம் ஆகும் என்று சொன்ன சிற்பி, ஏற்கனவே காஞ்சிப் பெரியவரின் ஒரு சிலை தயாராக இருப்பதாகச் சொல்லி, சிலையையும் மதுரைக்கு அனுப்பி விட்டார்" என்றார் வியப்பு குறையாமல்.

அதன்பின்னர், பக்தர்களின் பங்களிப்புடன் சிலையை பிரதிஷ்டை செய்து, 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்' என்னும் பெயரில் வழிபாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரையில் குடி கொண்டு, பக்தர்களுக்குத் தன் அருளாசியை வழங்கி வருகிறார் மகா பெரியவா. காஞ்சிப்பெரியவர் தனது கடைசி கால கட்டத்தில் இருந்த தோற்றத்தில் உள்ளது இங்குள்ள சிலை. உடல் மெலிந்து, நெஞ்சின் விலா எலும்புகள் புடைப்பாக தெரியும்படி தத்ரூபமாக இருக்கிறது. காஞ்சிபுரம் மடத்தில் ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், தங்கச் சப்பரத்தில் அவரது சிலை உலா வரும். கிட்டத்தட்ட அந்தச் சிலையை ஒத்த அளவிலேயே இங்குள்ள சிலையும் அமைந்திருப்பது சிறப்பு.

மதுரையில் மகாபெரியாவா ஆசியுடன் தினந்தோறும் உணவு வழங்கும் அட்சய பாத்திரம் மதுரை அனுஷத்தின் அனுகிரகம் ஸ்தாபகர் நெல்லை பாலு மதுரையில் கொரோனா காலத்தில் இருந்து ரோட்டோரம் உள்ள ஆதரவற்றோர் முதியோர் மற்றும் அரசுமருத்துவ மனையில் உள்ள நோயாளிகள் ஆகியோர்க்கு தினந்தோறும் மதிய உணவை நேரில் சென்று வழங்கிவருகிறார்.

மகா பெரியவா ஆசியுடன் மதுரையின் அட்சய பாத்திரம் என்ற டிரஸ்டை தொடங்கி தற்போது வரை 1250 நாட்களாக உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த சேவையை முன்னாள் அமைச்சர்கள் மாவட்ட ஆட்சியர், ஆன்மிக பெரியோர்கள் பாராட்டி வருகின்றனர்.

மதுரை மகா பெரியவா ஆலய தொடர்புக்கு 9442630815

எங்கே இருக்கிறது? மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள, எஸ்.எஸ்.காலனி எண் 13 பொன்மேனி நாராயணன் ரோட்டில் அமைந்துள்ளது. அரசரடி அல்லது காளவாசல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

திறப்பு நேரம் காலை 8 10 மணி, மாலை 5 இரவு 8 மணி, தொடர்புக்கு: 94426 30815

aanmeegamalar.com

# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 365 நாட்களில் 450 திருவிழாக்கள்



திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கலியுகத்தின் பிரபஞ்ச அதிபதியான வெங்கடாசலபதியின் உறைவிடமான திருமலை, புனித யாத்திரைகள் மற்றும் விழாக்களால் எப்போதும் கலகலப்பாக இருக்கும். திருமலையில் ஒவ்வொரு நாளும் ஒரு திருவிழாவாகும். அது 'நித்ய கல்யாணம்பச்சதோரணம்' என விவரிக்கப்படுகிறது.

ஒரு வருடத்தில் 365 நாட்கள் உள்ளன. ஆனால், திருமலையில் ஆண்டு முழுவதும் 450க்கும் மேற்பட்ட திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன என்றால் மிகையாகாது. இந்த திருவிழாக்கள் நித்யோற்சவம் (தினமும்), பக்சோற்சவம் (பதினைந்து வாரங்கள்), மாசோற்சவம் (மாதாந்திரம்), சம்வோற்வம் (ஆண்டு தோறும்), நட்சத்திரத் திருவிழாக்கள் (பிறந்த நட்சத்திரங்களின் அடிப்படையில்) என வகைப்படுத்தப்படுகின்றன.

தினசரி உற்சவங்களில் சுப்ரபாதம், தோமாலை, சஹஸ்ர நாமார்ச்சனை, அஷ்டதள பாத பத்மாராதனம், பூளங்கி, சுக்ரவார அபிஷேகம், ரோகிணி, ஆருத்ரா, புனர்வசு, சிரவணம் போன்ற நட்சத்திர விழாக்கள் அனுசரிக்கப்படும். மேலும் மத்ஸ்ய, கூர்மம், வராஹம், நரிசிம்மர், வாமனன், பரசுராமன், ராமர், பலராமர், கிருஷ்ணர், கல்கிதசாவதாரங்கள் போன்ற ஜெயந்திகளும், வெங்கடாசலபதிக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த மகான்களின் திருநட்சத்திரத் திருவிழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

உகாதி ஆஸ்தானம், தெப்போற்சவம், பத்மாவதி பரிணய உற்சவம், ஜேஷ்டாபிஷேகம், ஆனிவார ஆஸ்தானம், ரத சப்தமி, வைகுண்ட ஏகாதசி மற்றும் பிரம்மோற்சவம் ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் வரிசையாக சில வருடாந்திர திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

வருடாந்திர பிரம்மோற்சவங்கள் மிக முக்கியமான சமய விழாவாகக் கருதப்படுகிறது. இது, வாகனச் சேவைகளில் 5வது இரவில் கருட சேவையுடன் ஆண்டுக்கு 9 நாட்கள் அனுசரிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலும் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் தினமும் லட்சக்கணக்கான பக்தர்கள் திருப்பதி வெங்கடாசலபதி கோவிலுக்கு வருகை தந்து, சாமி தரிசனம் செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக வருடாந்திர பிரம்மோற்சவ விழாவில் வீதிஉலா வரும் வாகனச் சேவையை கண்டு தரிசனம் செய்வார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அனைவருக்கும் ஆயுதபூஜை விஜயதசமி திருநாள் நல்வாழ்த்துக்கள்
வரும் நம் பண்டிகை திருநாளில் உயர்தரமான
சீசோர்
மரச்செக்கு எண்ணெய்கள் பயன்படுத்துங்கள்


நாட்டு செக்கு நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் கிடைக்கும்.
எள் மற்றும் நிலக்கடலைக்கு ஆயில் மாற்றிதரப்படும்
லெட்சுமி ஆயில் பிளாண்ட்
3/224/2 மதுரை-ராமேஸ்வரம் சாலை
மஞ்சூர் - 623527
செல்: 96260 80353
8870358570

# ஆழ்வார் திருநகரியில் அற்புதங்கள் நிகழ்த்திய

# சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் தாலுகா ஆழ்வார்திருநகரியில் அழகிய மணவாளபுரம் என்ற கிராமத்தில் பல்வேறு காலங்களில் அங்கு மடாலயம் அமைத்து தங்கி இருந்து பல்வேறு சித்து மகிமை செய்து வந்தார்.

ஆழ்வார்திருநகரில் வாழ்ந்த போது மாயாண்டி சுவாமி அன்ன காவடி எடுத்து அனைத்து சமுதாய வீடுகளுக்கும் சென்று அன்னம் யாசனமாக பெற்று மடாலயத்தில் வந்து அந்தக்காலத்தில் திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம் மற்றும் நடைபயணமாக செல்வோருக்கு கொடுத்து வந்தார்.

ஆழ்வார்திருநகரியை சேர்ந்த மாயாண்டி ஆசாரி என்பவர் தென்திருப்பேரையில் மாட்டுவண்டி பட்டறை தொழில் செய்து வந்தார். ஒரு சமயம் அன்று எந்தவித வேலையும் இல்லாமல் கையில் பணம் இல்லாத சூழ்நிலையில் வீடு திரும்பி கொண்டிருந்த மாயாண்டி ஆசாரியின் மாட்டு வண்டியில் மாயாண்டி சுவாமி அமர்ந்து கொண்டார்.

அப்போது அவரிடம் மாயாண்டி இன்று எனக்கு அமுது உண்ண வேண்டும் என மாயாண்டி சுவாமி கேட்டார். என்னசெய்வதென்று மாயாண்டி ஆசாரி பணம் ஏதும் இல்லாத நிலையில் சுவாமிக்கு எப்படி உணவு கொடுப்பது என்று தெரியாமல் திகைத்தார், அவரது வண்டியில் இருந்து மறைந்த மாயாண்டி சுவாமி மாயாண்டி ஆசாரியின் வீட்டிற்கு சென்று அவரது மனைவியாரிடம் அம்மா இன்று உன்னுடைய வீட்டிற்கு உணவு அருந்த வருகிறேன். ஏற்பாடு செய்துவை என்று கூறி வெளியே சென்றார். பின்னர் வீடு வந்து சேர்ந்த மாயாண்டி ஆசாரியிடம் அவரது மனைவி சுவாமி வந்து சென்ற விபரத்தை கூறினார், இருவரும் பேசி என்னசெய்வதென்று திகைத்த போது அவர்களது வீட்டின் பின்புறத்தில் அறுசுவை உணவு நறுமணம் வீசியது. அப்போது மாயாண்டி சுவாமி வீட்டிற்கு வந்தார். அவர்கள் என்னசெய்வதென்று தெரியாமல் கையை பிசைந்து கொண்டிருந்த வேளையில் வீட்டின் உள்ளே சென்று பார் என மாயாண்டி சுவாமி கூறினார். சென்று பார்த்த மாயாண்டி ஆசாரியின் மனைவி ஆச்சர்யம் கலந்த மெய்சிலிர்க்கும் விதத்தில் உணவு பதார்த் தங்கள் நிறைந்து வழிந்தன. அதனை மாயாண்டி சுவாமிக்கு படைத்து மகிழ்ச்சி அடைந்தனர்.

### பரிசலை நிறுத்திய மாயாண்டி சுவாமி

குரங்களி அருகே உள்ள மங்கலகுறிச்சி தாமிரபரணி ஆற்றை கடப்பதற்கு பரி சலை பயன்படுத்தி வந்தனர். ஒருநாள் பரிசலில் மாயாண்டி சுவாமிகள் ஏறி குத்துகாலிட்டு அமர்ந்திருந்து பயணம் செய்தார். அப்போது படகோட்டி மாயாண்டியிடம் காசு கேட்டார். காசு இல்லாமல் மவுனமாக மாயாண்டி சிரித் தார். அப்போது படகோட்டி அவரை கீழே இறங்கிவிட்டார். பரிசல் புறப்பட்டு சென்றது. நடுவழியில் சென்றபோது பரிசல் நின்று விட்டது.



என்னசெய்வதென்று படகோட்டி திகைத்தார். அப்போது எதிர்கரையில் இருந்து மாயாண்டி கைகாட்டி படகோட்டியை கூப்பிட்டார். உடனே பரிசல் செல்ல ஆரம்பித்தது. மறு கரைக்கு சென்ற படகோட்டி சுவாமியை கண்டு வியந்து மன்னிப்பு கேட்டார்.

ஒரு முறை திருச்செந்தூர் நடைப்பயணக் குழுவில் வந்த யாத்ரிகர் ஒருவருக்குக் கடும்யான தாகம் எடுத்தது தண்ணீரைத் தேடி அங்கும் இங்கும் அலைந்தார். அப்போது ஒரு கிணற்றைப் பார்த்தார். அந்தக் கிணற்றில் தண்ணீர் அடிமட்டத்தில் இருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார். தண்ணீர் இறைக்க வாளி இருந்தது. ஆனால் கயிறு இல்லை ஆதியாத்தவன் மாயாண்டி சுவாமிகள் அல் லவா? அப்போது சுவாமிகள் அங்கே வந்தார். "என்ன அப்பு.. தண்ணீ தாகம் எடுக்குதா? இந்தா, இந்தத துண்டைக் கட்டி வாளியைக் கிணற்றுக்குள் இறக்கு தாகம் தீரும்" என்றார்;

யாத்ரிகருக்கோ ஆச்சரியம் கிணற்றிலோ அடி ஆழத்தில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரை எடுக்க இந்தத் துண்டு எப்படி உதவும் என்று குழம்பினார். இருந்தாலும், இந்த சுவாமிகள் இப்படிச் சொல்கிறாரே என்று வியந்து துண்டைப் பெற்றுக்கொண்டார். அதை வாளியில் கட்டினார். மாயாண்டி சுவாமிகள் புன்னகைத்தபடி இந்த யாத்ரிகரைப் பார்த்துக்கொண்டிருந்தார். துண்டால் முடியப்பட்ட வாளியைக் கிணற்றுக்குள் இறக்கினார். என்ன ஆச்சரியம் அந்தத் துண்டு எந்த அளவுக்கு நீளமாக இருந்ததோ, அந்த மட்டத்துக்குக் கிணற்றின் அடியில் இருந்த தண்ணீர் பெருகி மெள்ள மெள்ள மேலே வந்திருந்தது. தண்ணீரை எடுத்தார். தாகம் தணித்தார். பிறகு, சுவாமிகளை நன்றிப்பெருக்குடன் பார்த்துக் கைகப்பி வணங்கினார்.

ஒரு சமயம் வெள்ளைக்காரத் துரை ஒருவருக்குக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. எத்தனையோ வைத்தியம் பார்த்தும் துரையின் அவஸ்தை தீரவில்லை. ஒரு நாள் பணி நிமித்தம் அவர் ஆழ்வார்திருநகரி வந்தார். ஆனால், வந்த இடத்தில் வயிற்று வலியின் கொடுமை மேலும் அதிகரித்தது. வலி தாங்க முடியாமல் வயிற்றைப் பிடித்துக்கொண்டு தவித்தார் துரை. அப்போது அங்கே வந்தார் நம் சித்த புருஷரான மாயாண்டி சுவாமிகள். "என்ன அப்பு வயித்து வலி தாங்க முடியலியா?" என்று கேட்டார். துரையும் தன்னை ஒருவர் இப்படி அன்புடன் விசாரிக்கிறாரே என்று "ஆமாம்" என்றார். அங்கே அருகில் ஒரு கிணறு இருந்தது. அதன் அருகே சென்ற மாயாண்டி சுவாமிகள், கிணற்றில் இருந்து தானே நீரை இறைத்து துரையிடம் கொடுத்துக் குடிக்கச் சொன்னார். எதற்குக் குடிக்கச் சொல்கிறார், ஏன் குடிக்கச் சொல்கிறார் என்று துரையின் மனதில் ஆயிரம் கேள்விகள் எழுந்தாலும், கஷ்டப்பட்டு அந்த நீரை அருந்தினார். அந்த நீர் அவரது வயிற்றுக்குள் சென்றதும், ஏதோ





ஒரு சுகத்தை உணர்ந்தார் துரை. அதுவரை வயிற்றையே பிடித்துக்கொண்டு காட்சி தந்த துரை, அங்கிருந்து கையை எடுத்தார். ஆம்! அவரது வயிற்று வலி முற்றிலுமாகத் தீர்ந்தது.

இப்படி ஒரு எளிமையான சிகிச்சையின் மூலம் தன் வயிற்று வலியை ஒருவர் குணமாக்குகிறார் என்றால், அவரிடம் ஏதோ அற்புத சக்தி இருக்கவேண்டும் என்று தெளிந்த துரை, சுவாமிகளை வணங்கினார்.

கண்களில் நீர் மல்க, மாயாண்டி சுவாமிகளைப் பார்த்து, தன் நன்றியைச் சொன்னார். பிறகு, "உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் சாமீ. அதிகாரத்தில் இருக்கின்ற நான் தருகிறேன். கேளுங்கள்" என்று சொன்னார்.


சுவாமிகள் அப்போது தனக்கென்று எதுவும் கேட்கவில்லை. "அதெல்லாம் வேணாம் அப்பு... நீ நல்லா இருந்தாலே போதும்" என்று சொல்லி நகர்ந்துவிட்டார். ஆனாலும் அந்த துரை, மணல்குண்டு பகுதியில் சுமார் 40 சென்ட் நிலத்தை எழுதி வைத்துவிட்டார். அந்த நிலத்தைத் தற்போது மண்பாண்டத் தொழில் செய்பவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இதுபோன்று பல்வேறு சமயங்களில் பல்வேறுவகையில் தனது பக்தர்கள் வியப்படையும் வகையில் மாயாண்டி சுவாமிகள் லீலைகள் புரிந்துள்ளார். சுவாமிகளின் ஆசி பெற்ற பலரும் இப்போது தங்கள் குடும்பத்துடன் ஆழ்வார் திருநகரியில் நலமுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி அழகியமணவாளபுரம் கிராமத்தில் குலாலர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கட்டிக்குளம் சூட்டுக் கோல் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில் தினந்தோறும் ஒரு கால் பூஜையும் அனைத்து விழாக்கால பூஜையும், ஆடி மாதம் மாயாண்டி சுவாமிகளின் அவதார தினம் மற்றும் புரட்டாசி மாதம் நவராத்திரி கேட்டை நட்சத்திரத்தில் சுவாமிகள் குருபூஜை விழாவும் ஆழ்வார்திருநகரியில் நடைபெற்று வருகிறது.

மேற்படி மடாலயம் சுமார் 126 ஆண்டுகளுக்கு முன்பு சுவாமிகள் இங்கு தங்கியிருந்து தனது சித்து மகிமையால் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி பக்தர்களை தன்வசப் படுத்திய அருளாளர்.

மேற்படி மடாலயம் மிகவும் சிதிலமடைந்த நிலையில் இருப்பதால் அதனை முழுமையாக எடுத்து திருப்பணி நடத்த வேண்டியிருப்பதால் இந்த திருப்பணியை சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர் அறக்கட்டளை என்ற பெயரில் ஆழ்வார் திருநகரியில் உள்ள ஸ்ரீமாயாண்டி சுவாமிகள் ஆலயத்தில், இவரது சித்தரின் ஐம்பொன் சிலை2 பிரதிஷ்டை ஆகி உள்ளது. இந்தக் கோயில், நெல்லைதிருச்செந்தூர் மெயின் ரோட்டில் ஆழ்வார்திருநகரியில் இறங்கி, அதே திருச்செந்தூர் சாலையில் அரை பர்லாங் நடந்து சென்றால் அடையலாம் 9487898346



**பேரன்புடையீர், வணக்கம்,**

ஆழ்வார்திருநகரி அருள்மிகு சூட்டுக்கோல் மகாசித்தர் ஸ்ரீலஸ்ரீ மாயாண்டி சுவாமிகளின் மடாலயம் சுமார் 126 ஆண்டுகளுக்கு முன்பு மாயாண்டி சுவாமிகளால் அமைக்கப்பட்டு அங்கு சுவாமிகள் பல்வேறு சித்து விளையாட்டுகள் செய்து பக்தர்களுக்கு அருள்பாலித்த புண்ணிய பூமியான மேற்படி மடாலயத்தில் தரை தளத்தில் தியான மண்டபமும், தளத்தில் **ஸ்ரீ செல்வசுந்தர விநாயகர், சூட்டுக்கோல் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர் ஆகியோர் ஒரே பீடத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கும் விதமாக மிகவும் தாழ்வாக உள்ள கோயிலை உயர்த்தி சுமார் ரூ.1 கோடி மதிப்பில் புதிய மடாலயம்** அமைக்க அடியார்கள் பெருமக்களின் பணம் மற்றும் பொருளுதவியுடன் நடப்பு ஆண்டு குருபூஜைக்கு பின் முழுமையாக எடுத்து திருப்பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஸ்ரீ சற்குரு மாயாண்டி சுவாமிகளது குருபூஜை, கைங்கர்ய வகைகளுக்காக நன்கொடை, காணிக்கைகள் அனுப்பும் அன்பர்கள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**



**A.CHELLIAH / S.ARUNACHALAM**
Indian Overse Bank, Alwarthirunagari branch
Ac No.33500100004237 IFSC No. IOBA0003350

மேலும் விபரங்களுக்கு
94878 98346
9865509609
94892 16488

குருவழிபாடு தேவை! குருவழிபாடு கோடி புண்ணியம்!! குருபக்தி வாழ்வில் மகிழ்ச்சியை கொடுக்கும்! கடவுளை காட்டும்!!

# கணக்கன்பட்டி சித்தர் நிகழ்த்திய அற்புதங்கள்

பழனி முருகன் திருக்கோவில் அருகில் இருந்து 8கிமீ தொலைவில் இருக்கும் கிராமம் தான் கணக்கன்பட்டி. இங்கும் வாழ்ந்த மிக சக்தி வாய்ந்த மகான் கணக்கன்பட்டி மூட்டை சாமி என்கிற சத்குரு காளிமுத்து பழனி சாமி சித்தர்.

சாய்பாபாவின் மறு அவதாரமாக கருதப்படும் இவர் வாழும் போதே பல அதிசயங்கள் நிகழ்த்தியவர். ஒருநாள் வெளிநாட்டில் இருந்து ஒரு குடும்பம் பேச முடியத தன் குழந்தைக்கு பேச்சு வர பழனி முருகனை காண காரில் வந்து கொண்டு இருந்தனர்.

அப்போது அந்த கார் கணக்கன்பட்டி வழியே வரும் போது அங்கு ஒரு பெரியவர் பச்சை வேஸ்டி சட்டை யுடன் தலை பாகையுடன் வழிமறித்தார். இவர்கள் பயத்துடன் இறங்கினர். இவர்கள் சுத்த சைவம் சாமி அவர்கள் "இந்த பொம்பல போய் எதிருல இருக்கற கடையில் பிரியாணி வாங்கிவா" என்றார்.

இவர்கள் முழித்தார், அருகில் இருந்தவர்கள் சாமி சொல்வதை செய்து விடுங்கள் சாமி சக்தி வாய்ந்தவர் என்றனர்.

மூக்கை பிடித்து கொண்டு வாங்கி வந்தார் அந்தபெண் மணி. இந்த சாப்பாட்டை அந்த பையனுக்கு கொடு என் றார்.

தடுமாறினர் அந்த பெண்மணி பொட்டலம் பிரித்து பார்த்தார் அந்த பெண்மணி வாங்கிவந்த பிரியாணி சாம்பார் சாதம் ஆக மாறி இருந்தது.

இதை கண்டு ஆச்சரியத் துடன் கை எடுத்துவனங்கி விட்டு பழனி நோக்கி சென் றனர்.

அப்போது அவர்களின் காருக்கு எதிரில் ஒருவண்டி வந்தது அதை கண்ட அந்த சிறுவன் அம்மா வண்டி என்று கத்தி னான்.

அந்த சிறுவனிடம் இதை சற்றும் எதிர் பார்க்காத அந்த பெண்மணி சாமியின் மகிமை கண்டு ஆனந்த கண்ணீர் வடித்தார் .அவர் இருக்கும் திசை நோக்கி வணங்கினார். இவ்வாறாக பலரின் கர்ம வினை தீர்த்து அவர்களின் வாழ்க்கையை மாற்றியவர் நம் சித்தர் கணக்கன்ப்பட்டி மூட்டை சாமி.

இவரிடம் யார் சென்றாலும் போய் அந்த கல்லு எடுத்து அங்க போடு, இங்க கூடு கட்டு என்று சொல்லுவார். ஒருமுறை ஒருவர் நிலம் வாங்க இவரிடம் உத்தரவு கேட்கும் போது, கிழக்கு போய் வடக்கு போ என்று சூசகமாக கூறினார். உத்தரவு கேட்கவந்தவர் இரண்டு நிலம் பார்த்துள்ளார். அதில் ஒன்று வடக்கில் இருந்துள்ளது அதன் வழி கிழக்கு பார்த்து இருந்துள்ளது. கிழக்கு போய் வடக்கு போ என்று சுவாமி இதை தான் சூசகமாக கூறி உள்ளார் என்று எண்ணி அவரும் அந்த நிலத்தை வாங்கி வளர்ச்சி அடைந்துள்ளார்.

இவரின் ஜீவ சமாதிக்கு சென்றால் நிச்சயம் மாற்றம் உண்டாகும்.

இவரின் ஜீவ சமாதியில் ஒரு நல்ல அதிர்வலைகளை நன்றாக உண ராலம். பழனி பஸ் நிலையத்தில் இருந்து கணக்கம்பட்டி கோவில் வரை பஸ் வசதியும் உள்ளது.



கணக்கம்பட்டி சுவாமிகளின் ஜீவ சமாதி கோவிலில் தற்போது நவராத்திரி திருவிழா கடந்த 3ம் தேதி துவங்கி வரும் 12ம் தேதி சனிக்கிழமை வரை நடைபெறுகிறது. இதில் பல்வேறு ஆன்மிக சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.



# நீங்களும் உதவலாமே!

நன்கொடைகளுக்கு வருமான 80G வரிவிலக்கு உண்டு

Regd. No. 4-50/2021

## தொடர்ந்து 1250 நாட்களாக

**மதுரையில் ரோட்டோரத்தில் பசியால் தவிக்கும் வறியவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தினமும் 300 பேருக்கு மதிய உணவு வழங்கும்**

## மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட் சேவைக்கு நீங்களும் உதவலாமே!

**இயலாதவர்களுக்கு உணவு வழங்குவது மூதாதையருக்கு திதி கொடுத்த புண்ணியம் கிடைக்கும்**



மதுரையில் வீதியோரத்தில் உணவுக்காக தவித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கு “மதுரையின் அட்சயப் பாத்திரம்” என்ற அமைப்பை தொடங்கி கடந்த 1250 நாட்களுக்கு மேலாக தினந்தோறும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம். தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் போன்ற நாட்கள், பிற நாட்களிலும் இந்த புனிதப் பணிக்கு உதவிட அன்புடன் வேண்டுகிறோம்.

வாடிய பயிரை கண்டபோதெல்லம் வாடினேன் - வள்ளலார்

**ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூ.40 வீதம் 300 பேருக்கு ரூ.12000 ஆகிறது**

| | |
|---|---|
| 25 நபர்களுக்கு | ரூ.1,000 |
| 50 நபர்களுக்கு | ரூ.2,000 |
| 100 நபர்களுக்கு | ரூ.4,000 |
| 200 நபர்களுக்கு | ரூ.8,000 |
| 250 நபர்களுக்கு | ரூ.10,000 |
| 300 நபர்களுக்கு | ரூ.12,000 |



ஆழ்வார் திருநகரி எம்பெருமானார் ஜீயர் சுவாமிகளின் பாராட்டு

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை-16
9442630815 (G-Pay)

**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
A/C No:110031396472
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006



தரிசிக்க வாருங்கள்
தினமும் காலை 6.00 - 11.00
மற்றும் மாலை 6.00 - 8.00
ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 6 மணிக்கு குருவார சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

## ஸ்ரீ மஹா பெரியவா கோவில்

13, பொன்மேனி நாராயணன் ரோடு,
S.M.K.திருமண மண்டபம் அருகில், S.S.காலனி, மதுரை.
Rtn. நெல்லை பாலு, செல் : 94426 30815

aanmeegamalar.com

வாழ்க வளமுடன்!

நேர்மையாக!!

# கணக்கன்பட்டி செல்வோம் கவலைகளை தீர்ப்போம்





குருவடி சரணம் திருவடி சரணம்

| | |
|---|---|
| **நவராத்திரி விழா**<br>3.10.2024 வியாழக்கிழமை முதல்<br>12.10.2024 சனிக்கிழமை வரை | **பௌர்ணமி சிறப்பு பூஜை**<br>16.10.2024 / 17.10.2024 |
| **புனர்பூச நட்சத்திர சிறப்பு பூஜைகள்**<br>23.10.2024 புதன் / 20.11.2024 புதன்<br>17.12.2024 செவ்வாய் | **தீபாவளி அமாவாசை சிறப்பு பூஜை**<br>31.10.2024 வியாழன்<br>1.11.2024 வெள்ளி |

## ஓம் ஸ்ரீ சற்குரு பழனி சுவாமிகள் அறக்கட்டளை

மோகன் தோட்டம், கணக்கன்பட்டி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 613

94867 76551 94682 12345

www.sarguru.org பதிவு எண்:02-BK IV-2014

நல்லதே நடக்கும்!!!

நன்கொடை செலுத்த ஸ்கேன் செய்யவும்

https://sarguru.org/donation

aanmeegamalar.com